

# கலைநதி

தமிழ்க்கலாமன்றம்
புனித அந்தோனியார் கல்லூரி,
கண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

W.L. Dinesh
The Managing Director

NO: 83, Katugostota Road,Kandy

EPI

Educational progressive Institute

0777-112865

Email: epi.kandy1979@gmail.com

Facebook : epikandy

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனித அந்தோனியார் கல்லூரி – கண்டி
தமிழ் கலாமன்றம் அளிக்கும்

# கலை விழா – 2018

## பிரதம அதிதி

சண்முகம் சிவபாஸ்கரன்
DBA(Reading MUL),MBA(UK),ACMA(UK),CGMA,FIA(UK)
Chairman-ICBS Group of Companies
Managing Director-Imperial College of Business Studies(www.icbsgroup.com)
Managing Director-Royal Business Campus
(பழைய மாணவர்)

## சிறப்பு அதிதி

மொகமட் ரிஸ்வான்
BBA (Preston University - London)
Director - Itrend International - Dubai
(பழைய மாணவர்)

இடம் :- கல்லூரி மண்டபம்
நேரம் :- பி.ப 1.30 மணி
காலம் :- 2018 ம் ஆண்டு ஜூலை 29 (வெள்ளிக்கிழமை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# COLLEGE ANTHEM

Rally round the banner of the college
Rally round the maroon, double blue
Antonians young, Antonians Old
Your voices ring out "Lux de coelo"
Matches may be won or lost
Never mind defeat
Should all our records be forgotten?
No, No, no,no,no !
Antonians will be there ........................
Antonians will be there.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்ற கீதம்

கலை விளக்கே ஒளி விளக்கே!
கவின் விளக்கே வாழ்க!
கலாமன்றம் எனும் இனிய
தமிழ் விளக்கே வாழ்க!

இயல் வனர்ப்பாய் இசை வளர்ப்பாய்
நாடகமும் வளர்ப்பாய்
எல்லோரும் புகழ்ந்திடுவர்
வாழிய வாழியவே - கலை விளக்கே

கல்வியெனும் அமுது வைத்தாய்
கருத்துடையார் மகிழ்ந்தார்
கவிதை எனும் சரந் தொடுத்தாய்
கலை அறிந்தோர் மகிழ்ந்தார் - கலை விளக்கே

தெய்வ மகன் பொருளுரைத்தாய்
தெளிந்தவர்கள் தொழுதார்
தேனனைய இசை பொழிந்தாய்
தேரிந்தவர்கள் மகிழ்ந்தார் - கலை விளக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**T. Muthukumar**
*Proprietor*

# Quality Traders

Whole Sale & Retail Dealers in General Hardware Electrical and Engineering Tools

No. 69 A, Quarry Road,
Colombo - 12
Tel / Fax : 0112 333 494
Mobile : 0773 331 742

---



# ANCHOR STEELS

Importers, Scaffolding & General Hardware Merchants

No. 329, Old Moor Street,
Colombo - 12.

Tel : 2424226
Fax: 2478103

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலின் முகப்பிலிருந்து.......

இன்று எங்களது கலைவிழாவின் கருப் பொருளாக அமைந்துள்ள யாளி எனும் விலங்கானது பொதுவாக தமிழ்க் கோயில்களில் காணக்கிடைக்கும் ஒரு தொன்ம உயிரினச் சிறப்பாகும். இதனை வியாழம் என்றும் அழைப்பார்கள். பொதுவாக கோயில் தூண்களில் காணக்கிடைக்கும் இவ் யாளியானது சிங்கம் போன்ற ஓர் உயிரினமாகும். இவ் உயிரினம் சிங்கத்தையும் யானையையும் விட வலிமையானது என நம்பப்படுகின்றது. அதன் காரணமாகவே பெரும்பான்மையான சிற்பங்களில் யாளியானது யானையொன்றைத் தாக்குவது போன்று சித்தரிக்கப்பட்டுள்ளது. சங்க இலக்கியங்களில் யாளியானது அடையாளம் காணப்படும் இடமாக இள நாகனார் பாடிய நற்றிணைப் பாடல் காணப்படுகின்றது. அப்பாடலில் யாளி எனும் விலங்கானது புலியையும் கொல்லும் ,யானையைக்கூட தனது தந்தங்களால் பற்றி இழுக்கும் என அதன் ஆற்றல் விளங்கப்படுத்தப்பட்டுள்ளது. இது அன்றில் பறவை போலவும் , அனிச்சம் செடியினைப் போலவும் வாழ்ந்து மறைந்து போன உயிரினம் ஆகும். (மூலாதாரம்-இணையம்). பொதுவான யாளி வகைகளாக சிம்ம யாளி , மகர யாளி , யானை யாளி காணப்படுகின்றன. அவற்றுள் இன்று எமது கருப் பொருளாக அமைந்துள்ள யானை யாளியினூடே நாம் முன்வைக்கும் கருத்து என்னவெனில் சிங்கத்தைப் போல வீரமும் , யானையைப் போல மதிநுட்பமும் கலந்தவனே தமிழன் என்பதாகும்.

கலைமதியின் அட்டையை அலங்கரிக்கும் யாளியானது பச்சை நிற சாயலில் வடிவமைக்கப்பட்டதற்கான காரணம் அதன் தொன்மை மற்றும் அதனைப் பற்றிய தகவல்கள் அருகி வருவதை சுட்டிக்காட்டவே ஆகும். யாளியின் பின்புலமானது பாழடைந்த கோட்டை போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. அதற்கான காரணம் என்னவெனில் யாளியானது மற்ற விலங்குகளை விட வலிமையிலும் நுட்பத்திலும் சிறந்து விளங்கியதால் அது ஒரு தகர்க்க முடியாத கோட்டை போன்றது என உவமிக்கப்பட்டுள்ளது. மற்றும் கலைமதி என எழுத்தப்பட்டுள்ள எழுத்து வடிவமானது யாளியின் ஒவ்வொரு அங்கங்களையும் சுட்டிக்காட்டுகின்றது. உதாரணமாக அதன் தந்தம் “க“ எனும் எழுத்தின் மேற்பகுதியில் வடிவமைக்கப்பட்டுள்ளது..

அட்டை பட வடிவமைப்பாளர்
எழுத்தாளர்
சுரேஷ் கோபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INNOVA METAL

*General Hardware Merchants, Imports & Special Safety Equipments,*
*Air Conditioning & Engineering Tools, PVC Pipe and Fittings,*
*Suppliers to Government, Corporation & Private Institution*

No. 125, Bandaranayake Mawatha,
Colombo 12.

Tel/Fax : 011 2332720
Mobile : 077 8464798
077 7800790

E-mail : innovametal2015@gmail.com

# *Unilink Inter Trades*

*General Hardware Merchants, Importers & Suppliers*

31-2 / 5 A, Quarry Road,
Colombo - 12,
Sri Lanka.

Tel : 2337112, 2341020
Fax : 2342104


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Principal for Kalai Vizha - 2018

It is with great pleasure I extend my sincere greetings to the magazine KALAIMATHI on its release at the cultural event kalaivizha being staged annually by the Tamil cultural society. Culture is the set of customs, traditions and values of a society or a community such as an ethnic group of nation.

St. Anthony's College being a multicultural, multilingual educational institute values the peaceful coexistence and mutual respect between cultures. KALAIVIZHA the cultural show paves the way to bring out the hidden literary talents in the students to inculcate leadership qualities and team spirit. I'm glad that our college is an exemplary educational institution which has supported immensely to mold its student s to live a harmonious life in any multicultural society in the world. At the celebration of the fifty first kalaivizha I wish to appreciate the committed service of the staff, old boys, parents and well-wishers for their immense support in making the cultural day wonderful.

I congratulate the President, the organizing committee and the teachers of the Tamil cultural society for their untiring efforts, team work and dedication in publishing the magazine and making the KALAIVIZHA a great success.

Principal
Rev.fr.Henry Bernard Wijerathne

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Drive Your Dreams*

# WHEELS LANKA
## TRADING (PVT) LTD.

311,Katugastota Road,Kandy

Sri Lanka.

T:+94(0)815626871

F:+94(0)812204570

M:+94(0)77385617

www.wheelsalanka.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம அதிதியின் ஆசிச்செய்தி

50 ஆண்டுகளை நிறைவு செய்து 51வது ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கும் புனித அந்தோனியார் கல்லூரியின் தமிழ் கலாமன்றத்தின் கலைமதி சஞ்சிகைக்கு இவ்வாழ்த்துச்செய்தியை வழங்குவதில் பெரும் பூரிப்படைகிறேன்.

தமிழ் கலாமன்றத்தினுடனான எனது முதலாவது தொடர்பு 1987ம் ஆண்டு நான்காம் வகுப்பில் கல்வி பயிலும் போது ஆரம்பமானது. அவ்வருடம் இடம்பெற்ற தமிழ் கலைவிழாவில் முதன்முறையாக மறைந்த நமது கல்லூரி ஆசிரியை திருமதி ஆப்தீன் அவர்களின் வழிநடத்தலில் மேடையேற்றப்பட்ட கோலாட்டத்தில் நான் பங்கு பற்றியது இன்றும் என் மனதில் பசுமை மிக்க நிகழ்வாக உள்ளது.

அன்று தொடங்கிய தமிழ் கலாமன்றத்துடனான எனது பயணம் 1996ம் ஆண்டு இக்கலாமன்றத்தின் மாணவச்செயலாளராக முன்னேறி இன்றும் என்னால் முடிந்த பங்களிப்பை இக்கலாமன்றத்துக்கு வழங்குவதற்கான சந்தர்ப்பங்களையிட்டு உவகையடைகிறேன். எனது பாடசாலை நாட்களில் பல கலைவிழாக்களிலும் தமிழ் கலாமன்ற நிகழ்வுகளில் பங்குபற்றி இருப்பினும் வெள்ளி விழாக்கண்ட 1992ம் வருட கலைவிழா மிக முக்கியமானதாகும்.

அவ்வருட கலைவிழாவில் முதன்முறையாக மேடை நாடகத்தில் நடிக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அக்காலகட்டத்தில் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்ட உணவு முத்திரையை மையமாக கொண்டு "நவீன திருவிளையாடல்" எனும் தலைப்பில் திருவிளையாடல் திரைப்படத்தில் வரும் தருமி கதாபாத்திரத்தை ஏற்று நடித்தது இன்றளவும் மறக்கமுடியாத நிகழ்வாகும்.

புனித அந்தோனியார் கல்லூரியில் தமிழ்ப்பிரிவில் கல்வி பயிலும் ஒவ்வொரு மாணவனதும் வாழ்வில் தமிழ் கலாமன்றமானது மிகவும் முக்கியமான அங்கமாகும். ஏனெனில் நாம் நம் வாழ்வில் பல்வேறு மொழிகளை பயின்றாலும் எம் தாய்மொழியே எமக்கு முதல் மொழியாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேல் பழமை வாய்ந்த இலக்கிய மரபைக் கொண்டுள்ள தமிழ்மொழி நம் தாய்மொழி என மார்தட்டி கூறுவதில் இன்றும் பெருமைக்கொள்கிறேன். தொன்மையான மொழிகளில் ஒன்றான தமிழ்மொழி கி. முக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வரிவடிவம் பெற்றுள்ளது. எங்கள் தமிழ் மொழியிலிருந்து மலையாளம், கன்னடம், தெலுங்கு, துலு, குடகு என 23 மொழிகள் தோன்றியது என்பது வரலாற்று உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெவிட்டாத தெள்ளமுதாய் கேட்க கேட்க இனிக்கும் நம் தமிழை, செந்தமிழை பாரதியார் அன்றே பெருமையுறச் செய்தார். நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ? என்று கேட்கும் நிலைமைக்கு இன்றைய தலைமுறை காணப்படுகின்றது என்பது வருத்தத்திற்குரிய விடயமாகும். ஆயினும் இன்றும் நம் தமிழ் தாய் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றாள் என்பது மகிழ்ச்சிக்குரியது. சிறப்புமிக்க தமிழ்மொழியை மேம்படுத்துவதும் அதனை பேணி வளர்ப்பதும் தமிழ் பேசும் மக்களாகிய எங்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். நம் தமிழ் தாயை வாழவைப்பதற்கான சேவையில் தமிழ்கலாமன்றம் மிகவும் அளப்பரிய பங்காற்றுகின்றது என்பதில் மகிழ்ச்சிக் கலந்த பெருமைக்கொள்கின்றேன். இச்சேவை மென்மேலும் தொடர்வதற்கு எனது உளப்பூர்வ வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

"தமிழே எமது உயிரினுப்பு "

வாழ்க தமிழ்! வளர்க தமிழ் கலாமன்றம்!

திரு.சண்முகம் சிவபாஸ்கரன்
(பழைய மாணவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழி பிரதி கல்விப் பணிப்பாளரின் ஆசிச்செய்தி ....

இந்நாட்டின் பிரபல்யமான கல்லூரிகளில் ஒன்றாகப் பிரகாசித்து கொண்டிருக்கும் கண்டி புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரி தனது சேவை மூலம் நற்பிரஜைகளை உருவாக்கி நாட்டிற்கே நற்பெருமை சேர்த்துக்கொண்டிருக்கின்றது மாணவர்கள் கல்வி, பரீட்சைகளோடு நின்றுவிடாமல் கலை சிகழ்ச்சிகளினூடாக பல்வேறு அனுபவங்களை பெற்று இலை மறை காயாய் மறைந்து கிடக்கும் அறிவு திறன் ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து சமூக இயைபாக்கத்தை உருவாக்கும் மகத்தான பணியில் ஈடுப்பட்டுள்ளனர். இச் சிறப்பு மிகு கல்லூரியின் தமிழ் கலா மன்றம் தனது வருடாந்தக் கலைவிழாவை கொண்டாட திட்டமிட்டிருக்கும் இத்தருணத்தில் அதன் முக்கிய அம்சமாக வெளியிடப்படும் கலைமதி விழா மலருக்கு எனது நல்லாசிகளை வழங்குவதில் பெறுமையடைகின்றேன். இவ்வாறான விழாக்கள் இரு மொழிகளில் கல்வி கற்கும் மாணவர்கள் ஆசிரியர்கள் மத்தியில் கலாசார ஒற்றுமையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தி தேசிய ஒற்றுமைக்கு வழிவகுப்பனவாகின்றன. எமது கலாசாரப் பண்புகளை எதிர்காலச் சந்ததியினர் அறிந்துக் கொள்ளச்செய்வது சிறந்த விடயமாகும்.

இவ் விழாவின் வெற்றிக்காக அரும்பாடுபட்ட கல்லூரியின் அதிபர் உட்பட தமிழ் பிரிவின் அனைத்துப் பங்காளருக்கும் மனமுவந்த வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் நாளும், பொழுதும் தமிழ் கலாமன்றம் வளரவும் கலைமதி மிளிரவும் ஆசிகளை வழங்குகின்றேன்.

பிரதி கல்விப் பணிப்பாளர்
வலய கல்வி பணிமனை கண்டி
திரு அ. ஜெயபிகாஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Jaban Hardware,
## Balagolla

**Santhosam Jebanesan**

**081 2423509**



S. LAWRENCE

# J.L.T. METALS

Dealers of All kind of Short Bars etc. Tor, Ancles Flat Iron, G.I. Box,
Dealers in Scrap Iron, Copper Aluminium, Batteries & Brass.

No. 93/1, Kandy Road,
Balagolla, Kengalla.

081-3712009
0777-605999
072-7605999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments
From
The Management
of

Janatha Steels
20, Quarry Road,
Colombo - 12.

Tel: 011-2421412 Fax: 011-2845667

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதி அதிபரின் ஆசிச்செய்தி

கடந்த ஆண்டு கல்லூரியின் தமிழ்க் கலாமன்றம் 50 ம் ஆண்டு நிறைவினை வெகு விமரிசையாக கொண்டாடியது. 51ம் ஆண்டினை நிறைவு செய்யும் இவ்வேளையில் கலாமன்றம் கலைவிழாவினை நடத்துவதை முன்னிட்டு வெளியிடும் கலைமதி சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கலாமன்றம் இவ்வாண்டில் செயற்றிட்டங்களாக பாடசாலை மட்ட போட்டிகளையும் பாடசாலைகளுக்கிடையிலான பல்வேறு போட்டிகளையும் நடாத்தியது. போட்டிகளில் பங்குபற்றி ஒத்துழைப்பு நல்கிய அனைத்து சகோதர பாடசாலைகளுக்கும் நன்றி கூறுவதுடன் வெற்றி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

போட்டிகளை சிறப்புற நடாத்திய ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் மாணவர் செயற்குழுவிற்கும் பாராட்டுகளை தெரிவிப்பதுடன் என்றும் போல் கலைவிழா சிறப்புற நிகழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

“வாழ்க தமிழ் மொழி
வளர்க தமிழ் மொழி”

பிரதி அதிபர்
திருமதி.ஜெ.சேதுபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Rajson

**Dealers in Cosmetics & Oilments**

# 55A, Yatinuwara Veediya, Kandy.

Tel : 081 3838543

RS

# RAJAH & SONS

Dealers in Tobacco, Perfumes, Video Cassettes & Photo Films.

**109,**
**Colombo Street,**
**Kandy**

**Tel: 081-222283**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message from the Deputy Principal

Dear Student , staff members and parents ,

Today in the global village and the modern society the youth little by little reject our traditions and the cultural values causes many hard burnt.

Our antonian community is always there to remind our children the values of the culture which is based on the tamil cultural with their religious tradition.

I warmly solicit my wishes and congratulate the tamil cultural society members, teachers, parents and all the well wishers

May god bless you all !!

Mrs..Renuka Wijerathne
Deputy Principal

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Manager
S. Rajenthirakumar
(Rajen)

# Venus Pharmacy

NIHAL SUPER



27/B, George E. De Silva Mw,
Kandy.
Tel. 081 - 2204310

# Sri Murugan's

*Wholesale & Retail Dealers in Textiles*

No. 94,
Colombo Street,
Kandy - Sri Lanka

Tel :- 081-2223399

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பகுதித் தலைவரின் ஆசிச்செய்தி

உலகத்தின் உயிருள்ள,ஒளியுள்ள ,ஒழியாத ஒரே மொழி என் தமிழ் மொழிக்காய் தமிழ் தலைவன் என்று தாரமீகத் தமிழ்ச் சாரலாய்" சில துளிகள் .. இங்கே!

தமிழ் என்பது தரணியை தன்னகத்தே தலை சாய்க்க வைக்கும் ஓர் தனி மொழியா-கும். அதே போல் கல்லாதவரையும் கூட கவிபாட வைக்கும் ஒருகலை மொழியுமாகும். மத்திய மாகாணத்திலே பாண்டியன் கோட்டையாய் சோழனின் சாம்ராஜ்யமாய் நிமிர்ந்து நிற்கும் எம் அந்தோனியார் கல்லூரி படைக்கும் "கலைமதி 2018" இற்கு நான் பெரும் உவகை அடைகின்றேன்.

அன்றாய் இருக்கட்டும் " இன்றாய் இருக்கட்டும் " அது என்றாய் தான் இருக்கட்டும் " அந்தோனியர்கள் அத்தனை பேரின் அணிவகுப்பில் வரும் அற்புத படைப்பல்லவா இது "எம் முப்பரிமாண அசையும் கேலிச்சித்திரத்துக்காய் (ANIMATION) காத்திரு-க்கும் எம் மூத்த கதிர்கள் , வண்ணத்தமிழ் எனும் வர்ணவில்லுக்காய் வாசலில் நிற்கும் வருங்கால சந்ததிகள் . இவர்களுக்காய் வாழ்த்து கூறட்டும் எம் " கலைவிழா 2018".

வண்ணத்தமிழுக்கு ஒரு விழா சங்கத்தமிழுக்கு ஒரு விழா , எடுக்கும் எம் தமிழ்கலா மன்றத்திற்கு என் கனிவான வாழ்த்துக்கள்.

பெருந்தலைவர் அவர்களே மாணவ பெருந்தலைவரே செயலாளரே கலாமன்ற உறுப்பினர்களே கலைவிழா சிறக்க கலைமதி மிளிர தமிழ் அன்னையின் பாதங்களிலிருந்து தமிழ்ப்பகுதி தலைவனாய் தலைசாய்த்து வாழ்த்துகிறேன்.

நன்றி.

கலைத்தீபம், ரத்ன தீபம்
தேசாபிமானி
S.F,வசந்தன் J.P
(தமிழ் பகுதி தலைவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப் பகுதித்தலைவரின் ஆசிச்செய்தி ......

கண்டி புனித.அந்தோனியார் கல்லூரி ஆற்றிவரும் தமிழ்ப்பணி மலையகத்தின் மத்தியிலே மலையென உயர்ந்த மாபெரும் பண்பாடுகளையும், கலாசாரங்களையும் கட்டிக்காக்க உறுதுணையாக அமைந்துள்ளது. அதனகத்தே துளிர்த்துள்ள தமிழ்க்கலாமன்றம் வருடாந்தம் நடாத்தி வரும் கலைவிழா தமிழ்க்கலைகளின் இருப்பிடமாகவும்

அதன் பொருட்டு மலர்ந்து வரும் கலைமதி தமிழ் மணக்கும்நாதமாகவும் ஒலிப்பது அதிசிறப்பாகும். கல்லூரியில் தமிழன்னைக்கு மகுடமேற்று மகிழ்ச்சிப் பூரிப்பால் திளைத்திருக்கும் வேளைதனில் மைந்தர்களின் முத்தமிழ் நிகழ்வுகள் அரங்கேற்றப்படும் இந்நாளில் கலைமதிக்கோர் வாசகம் வழங்குவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

"தொட்டாலும் கை மணக்கும் , சொன்னாலும் வாய் மணக்கும்
நட்டாலுந் தமிழ்ப்பயிராய் முளைக்கும்."

என்று தமிழ்த்தாகம் கொண்ட கவிஞன் தமிழ் மணம் எப்படியெல்லாம் பரவி வீசுகின்றது என்பதனை அழகு நடையில் , பழகுத் தமிழில் கூறிச் சென்றுள்ளார். இது எம் கல்லூரியின் கலா மன்றத்தின் செயற்பாடுகட்கும் மிகவும் பொருந்தக் கூடியதே.அழகுத் தமிழினை பயிலுந் தமிழாகக் கொண்டு , பழகு தமிழில் பலரதும் உள்ளங்களைக் கவர்ந்திழுக்கும் வகையில் அரங்கேறும் கலைவிழாவை முன்நின்று நடாத்தும் தமிழ்க் கலாமன்றம் பல்லாண்டு நிலைத்துப் பயன் கொடுத்து வாழ இதயபூர்வமான ஆசிகளை அள்ளி வழங்குகின்றேன்.

திருமதி.ரே.யோகேந்திரன்.
உதவி இணைப்பாளர்
(தமிழ்ப்பிரிவு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயலாளரின் ஆண்டறிக்கை

மத்திய மலைநாட்டின் மாநகராம் கண்டி மாநகரில் மகாவலி நதிக்கரையருகே மாண்புறு எழிலுடனும் மங்காப் புகழுடனும் ஓங்கி நிற்கின்றது புனித.அந்தோனியார் கல்லூரி. தன்னை நாடி வரும் அனைத்து மாணவர்களையும் தன் பெயருக்கு ஏற்ப புனிதத்தோடு இன மத பேதமின்றி ஒன்றிணைத்து அவர்களது அறிவிற்கும் திறனுக்கும் ஏற்ற கல்வியை இனிதே புகட்டி நல்வழி காட்டி நற்பிரஜைகளாக அவர்களை உருவாக்கி இயங்கும் உலகில் தயங்காமல் வாழச்செய்யும் அரிய பணியை ஆற்றும் ஆலயமாகத் திகழ்கின்றது.

பன்மொழிக் கல்லூரியாகத் திகழும் இக்கல்லூரியிலே தமிழ் மாணவர் தம் கலை ஆர்வத்தை வெளிப்படுத்தவும் செந்தமிழ் தாய்க்கு மகுடம் சூட்டி ஆராதிக்கவும் 1967ம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட அமைப்பே இத்தமிழ்க்கலாமன்றம் ஆகும். அன்றிலிருந்து இன்று வரை ஆண்டு தோறும் புத்தெழிலோடும் புதுப்பொலிவோடும் தமிழன்னை ஆராதிக்கப்படுகிறாள். இவ்வருடம் 51 வது அகவையை இத்தமிழ்க்கலாமன்றம் கொண்டாடும் இத்தருணம் இம்மன்றச் செயலாளராகப் பணியாற்றும் வாய்ப்பு எனக்கும் கிட்டியதை நினைத்து அகமகிழ்கின்றேன்.

நினைப்பது மனிதனாக இருந்தாலும் அதனை முடிப்பது வைப்பவன் இறைவன் எனவே இவ்விழா இன்று இனிதே நிறைவு பெற ஆசி நல்கிய ஆண்டவனுக்கு முதற்கண் என் நன்றிகள். இம்மன்ற நிகழ்வுகள் அனைத்தும் இவ்வருடம் தரம் 12ல் கல்வி பயிலும் மாணவர்கள் தலைமையிலேயே நடைபெற்றன. இம்மாணவருக்கு ஏற்ற அறிவுறுத்தல்களையும் ஆலோசனைகளையும் வழங்கி பக்குவமாக அவர்களை வழிநடாத்தி இவ்விழா சிறப்புற நிகழப் பல வழிகளில் ஒத்துழைப்பும் ஆதரவும் நல்கிய எமது கல்லூரி முதல்வர் வணக்கத்திற்குரிய பிதா ஹென்றி பர்னாட் விஜயரத்ன அவர்களுக்கு மன்றம் சார்பாக பணிவான நன்றிகளை பன்முறைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். ஏம் அழைப்பை ஏற்று வருகை தந்து இவ்விழாவை மேலும் சிறப்புச் செய்த இவ்விழாவின் பிரதம அதிதி அவர்களுக்கு எம் இதயப் பூர்வமான நன்றிகள். மேலும் மதிப்பிற்குரிய பிரதி அதிபர்களான அருட்தந்தை அரலிய ஜயசுந்தர, திருமதி ரேணுகா விஜயரத்ன, மன்ற நிகழ்வுகள் அனைத்தையுமே கரிசனையோடு அவதானித்து ஆலோசனைகளை வழங்கிய திருமதி.ஜெ.சேதுபாதி ஆகியோருக்கும் பகுதித் தலைவரகள் , ஆசிரியர்கள் , மாணவர்கள் , நலன் விரும்பிகள் ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.P. ARCK ELECTRICS

Wholesales Dealers & Retails, in Electrics goods, Electrical Fittings & Wiring Accessories, Suppliers to Government, Corporation & Boards.

+94 11 2322419, 11 2322587 +94 77 5454361

+94 11 2322419 sp-arck@hotmail.com

119, Bandaranayake Mawatha, Colombo - 12, Sri Lanka.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்விழா சிறப்புற பல வழிகளிலும் சிறிதளவேனும் தம் பங்களிப்பை செய்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எம்மன்றம் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வருடம் எம் தமிழ் மன்றத்தின் மூலம் நிகழ்த்தப்பட்ட நிகழ்வுகளும் அது தொடர்பான விபரங்களை இங்கே சுருக்கமாகக் குறிப்பிடுகிறேன்.

மாணவர்களது தமிழ் ஆர்வத்தினை தூண்டும் விதமாகவும் தமிழறிவை மேம்படுத்தவும் பாடசாலை மட்டத்தில் பேச்சு, கட்டுரை கவிதை , பாவோதல் , சிறுகதை , இசை , விவாதம் போன்ற போட்டிகளை நடாத்தியது. அதே வேளை கண்டி வலயத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 25 பாடசாலை மாணவர்களுக்கும் இவ்வாய்ப்பு வழங்கப்பட்டு அதனையும் ஒரு தனி நிகழ்வாக இம்மன்றம் நடாத்தியமை குறிப்பிடத்தக்கது.

பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் முதல் இடம் பெற்ற மாணவர்கள் வலய மட்டத தமிழ்த் தினப் போட்டிகளில் பங்குபற்றினர். ஆவ்வாறு பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

| மாணவர் | நிகழ்ச்சி | பிரிவு | பெற்ற இடம் |
|---|---|---|---|
| ஞ.சத்விந்த் | தனிஇசை | 2 | 3ம் இடம் |
| ஆ.ஜகீர்தன் | பேச்சு | 4 | 2ம் இடம் |
| ஞ.ஜீதுஹர்ஷன் | இலக்கணப் போட்டி | 4 | 2ம் இடம் |
| சு.ராஜ்கிவின் | இலக்கிய விமர்சனம் | 5 | 2ம் இடம் |
| ஆ.சு.சு.யு.ஜோர்ஜ் | பேச்சு | 5 | 3ம் இடம் |
| நு.இக்மான் | தமிழறிவு வினாவிடை | தி.போ | 3ம் இடம் |
| ஆ.ராபின் | | | |
| ஞ.சிமாஸ் | | | |
| சு.ராஜ்கிவின் | | | |
| வு.ஹு.வினித் | | | |

செயலாளர்
செல்வி. தமிழரசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாளரின் சிந்தனையிலிருந்து..

"இனி மார் தட்டி தமிழ் பேசடா!
பல மொழி கற்றும் நம் நினைவில் நின்றும்
செம்மொழி தந்த அவை என்றும்
பலம் கொண்ட கருங்காலி மர வேரடா!!"

கல் தோன்றி மண் தோன்றா காலத்துக்கு முன்தோன்றிய மூத்த தமிழ் எங்கள் தமிழ் மொழி. தமிழின் இனிமை, எளிமை, அழகு, ஆற்றல் கண்டு உலகமே வியக்கின்றது. இளையது பழையது இருமையுந்தருவது தமிழ், வழிவழியாய் வளநலமுறுவது தமிழ். இத்தமிழின் புகழாரமாய் அந்தோனி மைந்தர்களின் 51 ஆண்டுகளின் சிகரமாய் தமிழன்னைக்கு தலைவணங்கி வெளிவரும் கலைமதி சஞ்சிகையை முன்னிட்டு பெருமிதம் கொள்கின்றேன்.

தமிழன்னை மகுடமேற்று மகிழ்ச்சி பூரிப்பால் திளைத்திருக்கும் வேளையிதனில் . மைந்தர்களின் முத்தமிழ் நிகழ்வுகள் அரங்கேற்றப்படுவதுடன் மட்டும் நின்று விடாது. அகமாம் ஆழ் ஆழத்தின் கண்காணும் எண்ணக்கருக்களுக்கு கலைமதி எம் படைப்பின் மூலம் கலைவிழா களம் அமைத்துக் கொடுக்கின்றது இத்தகைய கலைவிழாவின் வெற்றிகரமான நிறைவிற்கு பொருளாதார ரீதியில் உதவி செய்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மாணவ நெஞ்சங்களுக்கும் எனது உளம் கனிந்த தெரிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்

வாழ்க தமிழ்
வளர்க தமிழ் கலாமன்றம்

பொருளாளர்
திருமதி ச.கார்த்திகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SWAGGERS

## 2019 A/L
## BATCH



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருந்தலைவரின் பேனாவிலிருந்து...

முச்சங்கத்தை அலங்கரித்த தமிழ் , மூவேந்தர் வளர்த்த தமிழ் இயல்,இசை,நாடகம்என முத்தாக ஒளிரும் தமிழன்னைக்காக விழா எடுக்கும் இவ்வேளையில் ஒளி வீசி வரும் அந்தோனி மாணவர்களின் இக்கலைமதியா-னது 51 வது ஆண்டில் இன்று காலடி எடுத்து வைக்கின்றது.

நாளொரு மொழி நாம் கற்றாலும் தமிழுக்கவை ஈடாகுமா? தமிழை சுவைத்தவர்கள் தமிழுக்கு அமுதென்று பெயர் என்றார்கள் இவ்வாறு தனிச்சிறப்பு பெற்ற தமிழ்மொழியை தாய்மொழியாய்ப் பெற்ற நாம் வரம் பெற்றவர்களாகின்றோம். எனவே , நூற்றாண்டுகள் கடந்து வாழும் அந்தோனியார் கல்லூரியில் அரைநூற்றாண்டைக் கடந்து தமிழைக் கொண்டாட விழா எடுக்கும் அந்தோனி மாணவர்களின் முயற்சியானது பெருமிதப்படத்தக்கது.

"மொழி நூறு பிறந்தாலும்
உயிரோடு ஒருமொழியே உறவாடி வாழும்
நாவோடு விளையாடி தேன் சுவையில்
மிதந்தோடி சாவில்லா தமிழ் மட்டும்
தரணியினை ஆளும்."

தமிழ் அன்னை மடியினிலே அந்தோனி மைந்தர்களின் கலைமதி எனும் ஏடா-னது என்றும் வாழ ஆக்கமும் ஊக்கமும் கிடைக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

பெருந்தலைவர்
திருமதி.எஸ்.செல்வராணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதழ் ஆசிரியரின் இதயத்திலிருந்து ........

கண்டி புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரியின் தமிழ் கலாமன்றம் வெளியிடும் "கலை மதி" சஞ்சிகையின் 51 வது மலர் தங்களின் கரங்களில் தவழ்வதையிட்டு இம் மலரின் இதழ் ஆசிரியர் என்றவகையில் நான் பெரும் உவகையடைகின்றேன்.

வருடா வருடம் கலைமதி சஞ்சிகையின் வளர்ச்சி, எழுச்சி கொண்டமைவது எம் அனைவரையும் ஆனந்தமடைய செய்யும் என்பதில் ஐயமில்லை. மாணவரின் எழுத்தாற்றலை வெளிக்கொணர்வதற்கு மாத்திரமின்றி அவர்களது ஆளுமை விருத்திக்கும் களமாக சஞ்சிகைகள் அமைகின்றன அதற்கினங்க எமது தமிழ் மொழி பேசும் மாணவ செல்வங்களின் கலைதிறனை வெளிக்கொணரவும் வளர்க்கவும் கண்டி புனித அந்தோனியார் கல்லூரியின் தமிழ் கலா மன்றம் வளர்வதன் வெளிப்பாடாக கலை மதி இம் முறையும் மலர்கின்றது

இம் மலர் வெளியீட்டிற்கு பேரார்வத்துடனும் ஒத்துழைப்பு நல்கிய அதிபர் மற்றும், பிரதி அதிபர்கள் ஏனைய பெரியோர்கள் அவர்களது ஆலோசனைகளையும் உதவிகளையும் தந்து இம் மலரினை உருவாக்கும் முயற்சிக்கு உரமளித்த பல்வேறு வழிகளிலும் ஒத்தாசை புரிந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் அம் மலரினை வெளியிடுவதற்கு நிதியுதவி அளித்த நல் உள்ளங்களுக்கும் தங்கள் ஆக்கங்களை அக்கறையுடன் தந்துதவிய அனைவருக்கும் எனது உளம் தீராத நன்றிகள் உரித்தாகட்டும்

இதழ் ஆசிரியர்
திரு க. பிரபாஹரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவத் தலைவரின் இதயத்திலிருந்து.....

குறிஞ்சி நிலத்தின் மாநகரின் எழில் நகராம் கட்டுகஸ்தோட்டையில் பெருவிருட்சமாய்த் தழைத்தோங்கித் தடம்பதித்து அண்டியோர் தவம் சிறக்கத் தண்ணிழலீந்து ஆற்றங்கரையோரத் தென்றலினால் தாலாட்டி , வளமூட்டி அரும்பெரும் கலைகளினால் பக்குவமாய்ப் போஷித்துப் புடமிட்டு உருவாக்கும் பணியதனில் உறைந்துநிற்கும் உறைவிடமே"
எம் பாசத்திற்குரிய கல்லூரித் தாயே !

செந்தமிழால் உன் புகழ்ப்பாடத் தந்திட்ட வரமதற்காய் பணிகின்றேன்
நிதமுமுனை நானும் உனில் ஒரு கனி.

தமிழ் கூறும் நல்லுலகால் முத்தமிழைப் படைத்தளிதிது பார்போற்றும்
உத்தமரை மெய்ஞானச் சுடரொளியாய் பண்புடனே
பவனிவரச் செய்யாகம் வேண்டிநின்றாய்,
நின் ஆசை யாமறிவோம் நற்சிற்பி நாமானோம்.

"தமிழ்க்கலாமன்றம்" தந்திட்ட புரவலரே பணிகின்றோம.
மாசற்ற உம் பெரும்பணிஇ பறைசாற்ற விளைந்துள்ளோம்.
பொன்விழாக் கண்டுள்ளோம் - பிறகென்ன
வீறுநடைபோடுகின்றோம்.

2027 இல் மற்றுமோர் பெருவிழா ' வைரவிழாக் கலைவிழா.
எழுந்திடுவீர் சகோதரரே!
அழகுமொழியன்றோ " எம் தாய்மொழி
ஆரம்பம் யாரறிவார் ? ஆதிசிவன் பெற்றெடுத்த பக்திமொழி.
கால நீரோட்டத்தில் கறைபடிய விட்டுவிடாதீர் , கவலைகள் பலவுண்டு.
பேச்சிலே மட்டுமல்ல, எழுத்திலுமே பல கறைகள் !.....
தமிழன்னை நொந்தழுதால் தாங்காது தமிழுலகம்.
புனித அந்தோனியார் மைந்தர்களே , புரண்டெழுவீர் யாகத்திற்காய்.
கூறியவை போதுமென நன்றிகளை நாடுகின்றேன் ,
கலாமன்றம் சார்பாக...

அருமையான அதிபர்களே, புனித ஆசீர்வாதப்பரின் ஆத்மசக்தி " நீங்கள்.
ஆற்றல்மிகு ஆசான்களே, அறிவின் விம்பம் - நீங்கள்.
உரிமையுடன் கைகோர்க்கும் அண்ணன்மாரே, எம் உற்றார் - நீங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலம் வாழ வாழ்த்தி நிற்கும் பெற்றோரே, பெருமனிதர் - நீங்கள்.
கலைவிழாவின் சிற்பிகளாம் நண்பர்களே , எம் உயிர்த்தோழர் - நீங்கள்.
எம் அசைவில் விழாக்காணும் நல்லுள்ளங்களே, எம் வலு - நீங்கள்.

நின் ஆசீர் பொழிந்திடுவீர்,வாழ்த்திடுவீர் - அங்ஙனமே வளர்ந்திடுவீர்.
ஓங்கட்டும் இங்ஙனமே, தமிழ்கூறும் நல்லுலகம்.

நன்றி

மறிஷன் ரொஹிட் ஜோர்ஜ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ செயலாளரின் மனதிலிருந்து..

இனிமை , சுவை , அழகு நிறைந்த எம் தமிழ் மொழியைக் காப்பதுவும் , பேணுவதும் ஒவ்வொரு தமிழனின் கடமையாகும்.இதனை இலட்சிய நோக்கமாகக் கொண்டு தமிழ்மொழியை வளர்ப்பதிலும் கலைகளை வளர்ப்பதிலும் எமது கலாமன்றம் அரிய செயல்களை ஆற்றியுள்ளது.

மலையகத்தின் கலையகமாகி எமது கல்லூரியின் கலாமன்றம் வருடம் 51 ஐ பூர்த்தி செய்த பின்னரும். இன்னுமின்னும் இனிமையுடன் முத்தமிழை முன்னிறுத்தி தமிழ் மாணவ மணிகளின் இளநெஞ்சங்களில் ஊற்றெடுக்கும் கலையாற்றல்களை , மொழியீற்றல்களை , சிந்தனைச்சிறப்புக்களை உலகோருக்கு உணர்த்தும் வகையில் தன்னகரில்லா சேவையைத் தொடர்ந்தும் ஆற்றி வருகின்றது.

தமிழ் மாணவர்களைப் புது யுகத்திற்கு வழிநடாத்தி தலை நிமிர்த்திட வருடம் ஒரு முறை பூக்கும் மலரான கலைவிழாவை இனிது நடத்திட அம்மலரில் சிந்திய தேனை ஒப்பதான கலைமதியை உங்கள் முன் படைத்திட ஆதரவு வழங்கிய ஆசிரியர்களுக்கும் , எமது கலைப்பயணத்திற்கு ஒரு கலங்கரை விளக்காகத் திகழும் அதிபர் அவர்களுக்கும் , எந்த நிலையிலும் எமக்கு உறுதுணையாயிருக்கும் பெற்றோர்களுக்கும் , எக்கால கட்டத்திலும் சலிக்காது உதவிக்கரம் நீட்டும் எம் பழைய மாணவர்களுக்கும் வர்த்தக விளம்பரங்களை தந்துதவிய வர்த்தகங்களுக்கும் , என் சக மாணவர்களுக்கும் , இவ்விழாவின் சிறப்பிற்குதவிய அத்தனை நல்லுள்ளங்களுக்கும் என் உளங் கனிந்த நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

இக் கலாமன்றத்தின் பணி மென்மேலும் தொடர வேண்டும். தமிழ் மொழியின் புகழ் எட்டுத்திசையும் ஒலிக்க வேண்டும்.

நன்றி.

மாணவ செயலாளர்
M.F.முஹம்மது அர்ஷத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவ இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து..

இந்து சமுத்திரத்தின் முத்தான நம் நாட்டின் மத்தியிலே எழில் கொஞ்சும் நகராம் கண்டி நகரில் கல்வியின் கேந்திரமாகத் திகழும் புனித.அந்தோனியார் கல்லூரியின் தமிழர்களின் தனிப்பெரும் அடையாளமாக வருடந்தோறும் இருள்நீக்கி ஒளிவீசி வரும் கலைமதியின் இதழாசிரியராய் பணியாற்றும் வரம் கிட்டியதில் நான் பேருவகையடைகின்றேன்.

தமிழ் பண்பாடு , கலாசாரம் என்பன மேலைத்தேய மோகத்தில் சிக்குண்டு சீரழிந்து போகும் இக்காலத்தில் தமிழரின் ஆயகலைகள் அறுபத்துநான்கிற்கும் விழா எடுத்து அவ்விழாவில் கலைமதியெனும் வைரத்தை உலகுக்கு அளித்திடும் மகத்தான தொழிலை செய்துவரும் புனித.அந்தோனியார் கல்லூரியின் தமிழ்க் கலாமன்றத்தின் உறுப்பினராக இருப்பதற்கு கூட மாதவம் செய்தல் வேண்டும். தமிழ் என்ற மொழி செம்மொழிகளுள் ஒன்று அதாவது தொன்று தொட்டு வழங்கி வந்த மொழிகளுள் ஒன்று , ஆதி அந்தமற்ற மொழி : இவ்வாறான ஒரு மொழியை கற்பதற்கு மேலும் ,அதனை தாய்மொழியாய் அடைவதற்கு நாம் ஏழேழு ஜென்மங்களிலும் புண்ணியம் செய்திருத்தல் வேண்டும்.

தமிழர்கள் தான் இவ்வுலகிற்கு நாகரிகத்தை பழக்கியவர்கள் , விஞ்ஞானத்தை வழங்கியவர்கள் மற்றும் மனிதன் வாழத் தேவையான கோட்பாடுககள் அனைத்தையும் முன் வைத்தவர்கள். அன்று , கி.மு 10527 ல் மற்ற மொழிகள் எல்லாம் எழுத்துப் படித்துக் கொண்டிருந்த போது பாண்டிய மன்னன் காய்கினவழுதி 4449 புலவர் பெருந்தகைகளை ஒன்றிணைத்து முதலாம் தமிழ்ச்சங்கத்தை தோற்றுவித்தான். இன்று உலக மொழியான ஆங்கிலம் உருவாகாத அந்நாளிலேயே முதுநாரை , முதுகுருகு , களரியாவிரை போன்ற இலக்கிய நூல்களை இயற்றினான் தமிழன். கார்முகில் பரிதியை மறைப்பது போல் தமிழரின் நாடாகிய குமரிக்கண்டம் முழுவதும் கடல்கொண்டு போனபோதும். துவழாத தமிழன் பாண்டியன் வெண்தேர் செழியன் இரண்டாம் தமிழ்ச்சங்கத்தை நிறுவினான் மற்ற மொழிகளெல்லாம் எழுத்துப் படிக்கையிலே உலகின் முதல் இலக்கண நூலாம் தொல்காப்பியத்தை சமைத்தான் தமிழன். பின்னர் கடல் கொந்தழிப்பால் பாண்டியத் தலைநகர் கபாடபுரம் அழிந்தபின் கி.மு 1915ல் மூன்றாம் தமிழ்ச்சங்கம் திருப்பரங்குன்றத்தில் நடந்தது. தமிழர் கலை மட்டுமல்லாது விஞ்ஞானத்திலும் வளர்ச்சி கண்டவனாகவே இருந்துள்ளான்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம் இன்று கோள்கள் ஒன்பது உள்ளன என ஆராய்ந்து சொல்லு முன்பே நவக்கிரக வழிபாட்டை மேற்கொண்டான் தமிழன், அகத்திய சாஸ்திரம் என்றொரு நூல் இருப்பதே பலருக்கு தெரியாது அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ள மித்ரவருணசக்தி என்பது மின்சாரம் என்பது நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும். இந்தியாவின் பழமையான அணைக்கட்டான கல்லணையிலிருந்து ஆயிரம் வருடமாக ஆறு நிலநடுக்கங்களையும் தாண்டி கம்பீரமாய் ஓங்கி நிற்கும் தஞ்சை பெரிய கோவில் வரை தமிழர் கட்டியது. அன்றுமட்டுமல்ல இன்றும் உலக மக்கள் பாவிக்கும் மின்னஞ்சலைக் கண்டுபிடித்தவர் சிவா அய்யாதுரை என்ற தமிழர் , உலகின் முதற்தர தேடுதளமான கூகுளின் பிரதம் நிறைவேற்று அதிகாரி சுந்தர் பிச்சை எனும் தமிழர்.தமிழ் என்பது இப்பேரண்டம் போல முடிவற்றது. இதன் அருமை தெரியாது நம்மில் பலர் இன்று மேலைத்தேய கலாசாரத்திற்கு இயல்பாக்கம் அடைந்து வருகின்றனர். இது எமது அறியாமையையே காட்டுகின்றது. வாழச் சொல்லிக் கொடுத்ததே நாமாக இருக்கையில் நாமே நம்மை தாழ்த்திக்கொள்வது என்பது மூடத்தனம். நமது பண்பாடை மறந்து கலாசாரத்தை துறந்து வாழும் வாழ்க்கை என்பது நடைபிணத்தின் வாழ்க்கை போன்றது. நாம் நாமாக இருக்கும் வரை நமது திறன்கள் எல்லையற்றவை. தமிழை மறப்பதென்பது தாயை மறப்பது போலாகும்.

தமிழன்னைக்கு என்னால் இயன்ற சேவையை செய்ய எனக்கு வாய்ப்பளித்த தமிழ்க்கலாமன்றத்திற்கு கோடான கோடி நன்றிகள். இதன் பணி ஆயிரமாயிரம் கலைவிழாக்களையும் கலைமதிகளையும் உருவாக்கட்டும். தமிழன்னையின் கருணைக்கண் எப்பொழுதும் இக்கலாமன்றத்தின் மீது படிவதாக.

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்:
பாமரராய்,விலங்குகளாய்,உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு,
நாமமது தமிழரெனக் கொண்டுஇங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்.“

நன்றி

மாணவ இதழாசிரியர்
ஹரிஹம்ஷயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாமன்ற செயற்குழு - 2018

| | |
|---|---|
| போசகர்கள் அதிபர் | வண.பிதா.K.G.ஹென்றி பேனாட் விஜேரத்ன |
| பிரதி அதிபர் | திருமதி.J.சேதுபதி |
| பகுதித் தலைவர் | திரு.S.F.வசந்தன் |
| உதவிப் பகுதித் தலைவர் | திருமதி.R.யோகேந்திரன் |
| ஒழுக்காற்று குழு தலைவர் | திரு I N நேசகுமார் |
| பெருந்தலைவர் | திருமதி.S.G.செல்வராணி |
| உபதலைவர் | திருமதி.S.விஜயராணி |
| கௌரவ செயலாளர் | செல்வி.K.தமிழரசி |
| உப செயலாளர் | திரு.J.வித்யாகரன் |
| கௌரவ பொருளாளர் | திருமதி.S.கார்த்திகா |
| உப பொருளாளர் | திருமதி.M.H.F.ரஸ்மியா |
| இதழாசிரியர் | திரு.G.பிரபாகரன் |
| | திருமதி.V.பேரின்பவள்ளி |
| அங்கத்தவர்கள் | திருமதி.S.ஜெபரஞ்சனி |
| | திரு.A.தேவதாசன் |
| | திரு B.K ஜெயசீலன் |
| | திருமதி.S.செல்வமலர் |
| | திரு.V.ரவிச்சந்திரன் |
| | செல்வி.K.கல்யாணி |
| | திருமதி.V.K.இராஜாராம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்க்கலாமன்ற செயற்குழு 2018

| | |
|---|---|
| தலைவர் | மெரிஷன் ரொஹிட் ஜோர்ஜ் |
| உப தலைவர் | பிரஸ்லி அம்ப்றோஸ் |
| செயலாளர் | மொஹமட் அர்ஷாட் |
| உப செயலாளர் | தனுஷ் அஷ்விந்த் |
| பொருளாளர்கள் | தர்மதாசன் நர்மதன்<br>என்று வில்பிரட் |
| எழுத்தாளர் குழாம் | வென்சன்லாஸ் ஹரிஹம்ஷயன்<br>சுரேஷ் கோபி<br>பிரான்ஸ் லியோ<br>பெரியசாமி ராஜன் நவீன் |
| ஒருங்கிணைப்பானர்கள் | சியாம் சுந்தர் கிஷோவர்மன்<br>ராமநாதன் ஹரிஷ்<br>ஜெபகுமார் நோர்மன் நிஷாந்தன் |
| செயற்குழு அங்கத்தவர்கள் | சத்தியமூர்த்தி ரதீஷன்<br>மகேஷ்வரன் மிதுலன்<br>ராஜ்கிருஷாந்த் கிருஷ்ணராஜா<br>மொஹமட் உசாமா<br>யேசுதாசன் ரிக்ஷன்<br>மொஹமட் முஷர்ரப்<br>விஸ்வநாதன் நிதர்ஷன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கத்தவர்கள்

மகேஷ்வரன் ஜனுஷாந்தன்
செல்வநாயகம் அபிலாஷ்
விஸ்வநாதன் நிதர்ஷன்
ஸ்ரீதரன் சிதுர்ஷன்
பரமநாதன் மதூஷன்
மொஹமட் ஹிஷாம்
பாலசுப்ரமணியம் அஜந்தராஜ்
பிரவீன் ஆகாச்
ஜுட் டிலக்ஷன்
யோகராஜா ஜெயராஜ்
மொஹமட் ஹிப்னி
அவினாஷ் ஜொனதன்
மொஹமட் அல்தாப்
மொஹமட் ஆகிப்
யோசுவா சில்வெஸ்டர்
அப்துல் ஹகீம்
மொஹமட் கைப்
இமாத் பசீல்
அம்மர் அஹமட்
ஹகீம் மியன்டாட்
மொஹமட் அம்ஜத்
இம்ஷாட் இல்லியாஸ்
மொஹமட் நஸ்மி
முஆஸ் அஹமட்
மொஹமட் ருஷாம்
மொஹமட் ரிஸ்லான்
நுஸ்கி அஹமட்
மொஹமட் அப்துல்லா
ராஜ சனத்
தமோஜ் பிரவீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ST ANTHONY'S COLLEGE,KANDY

TAMIL SOCIETY COMMITTEE-2018




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

St Anthony's college Kandy
Tamil Society Students Commitee - 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

St Anthony's college Kandy
Tamil Society Students members - 2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Praise the Lord"

P. Manoj
Proprietor

# Amex ENTERPRISE

*Importers & Dealers in General Hardware & Electrical Goods*
*Engineering Items, SS Items GI Items, Safety Equipments, PVC Pipes & Fittings*



No. 19 2/1, Abdul Hameed Street,
Colombo 12.
E-mail : amexen@sltnet.lk

Tel : 011 5741053 / 011 5883317
Fax : 011 2337686
Mobile : 077 6574126

S. Vijayakumar
Managing Partner

# Vinkah Steels

Phone : +94 (11) 2446273
+94 (11) 2447475
Direct : +94 (11) 2446273
Mobile : +94 (72) 7010023
Wh/Wechat : +94 (77) 5376613
E-mail : vinkah@sltnet.lk

119/2, Srimath Bandaranayaka
Mawatha,
Colombo 12,
Sri Lanka.

G-mail: vijayakumarvijay282@gmail.com

(Pioneers of Steels)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1996 A/L


# BATCH

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## LLOYD'S STEEL

***Importers of Ferrous and Non Ferrous Metal, Foundry Chemicals, Ferro Alloy & Minerals.***


#147-147A, Bandaranayake Mawatha, Colombo 12. SRILANKA.
©: (+94) 2328203, 2470206, Hotline : (+94-11) **2327700**
Fax: (+94) 2438559
E-mail : lloyds@sltnet.lk
lloydssteellk@yahoo.com / lloydssteellk@gmail.com
Web : http ://www.lloydssteel.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய அரங்கில்

மங்கள விளக்கேற்றல்
இறை வணக்கம்
பாடசாலை கீதம்
மன்ற கீதம்
வரவேற்பு உரை
பூஜை நடனம்
இசை விருந்து
பரிசளிப்பு விழா
அதிபர் உரை
பொம்மலாட்டம்
முன்வைத்தல் (Animation)
அமுத கானம்
நாடகம்
பிரதி அதிதி உரை
அதிதிகளை கௌரவித்தல்
நடனம்
நன்றியுரை
தேசிய கீதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிரிகள்

ஏழ்மையும் வறுமையும்
இன்பத்தின் எதிரிகள்
சினமும் கோபமும்
அறிவின் எதிரிகள்
மந்தபுத்தியும் சோம்பலும்
வெற்றியின் எதிரிகள்
பொய்யும் கௌரவமும்
நட்பின் எதிரிகள்

எஸ்.சப்ஜன்
தரம் 8T

## தாய்

ஆயிரம் ஜென்மம்
எடுத்தாலும் அமர
முடியாத ஒரே
ஆசனம் என்
தாயின் கருவறை
கல்லில் செதுக்கிய
கடவுளை விட
கருவில் சுமந்த
தாயே மேல்

ஏ.பீ.எஸ்.ஜெனிடன்
தரம் 10T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மை பேசுதல்

இந்துக்களாகிய நாம் நமது வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய பண்புக-ளில் முதன்மையானது உண்மையைக் கடைபிடித்தலாகும். உண்மையைத் தன் வாழ்வின் இறுதிவரைக் கடைபிடித்தவன் உண்மையின் வழியில் உத்தம-னாவான் என்பது உண்மை. இதற்கு நாம் புராண இதிகாசக் கதைகளில் வரும் சில கதாபாத்திரங்களை முன்மாதிரியாகக் கொள்ளலாம்.

அந்தவகையில் அரிச்சந்திரன் கதையில் வரும் அரிச்சந்திர மன்னன் உண்மையின் வழியில் சென்று , தான் கடைபிடித்த உண்மையின் காரணமாக நாடு,ந-கரம்,வீடு,மனைவி,பிள்ளை என சகலதையும் இழந்த நிலையில் கூட உண்மையை இறுதிவரை கடைபிடித்து உயர்கதி அடைந்த தன்மையை அறிய முடிகிறது. இத்தகைய சிறந்த பண்பான உண்மை பேசும் எண்பானது ஒருவனின் வாழ்வில் என்றும் உயர்வையே தரும் என்பதற்கு மேற்கூறிய அரிச்சந்திர மன்னனே சிறந்த உதாரணமாவான்.

உயர்வான வாழ்வைத் தரக்கூடிய இத்தகைய உண்மை எனும் பண்பை பொய்யாமொழிப் புலவர் பின்வருமாறு புகழுகிறார்.

"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று."

ச.ஜெனார்த்தன
தரம் 8T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சிறப்பு

கல்விச் செல்வம் , பொருட் செல்வம் இவ்விரு செல்வங்களில் சி-றந்த செல்வம் கல்விச் செல்வமாகும். குல்வி ஈடு அணையிலாச் செற்வம் அதனால்தான் திருவள்ளுவர் "கேடில் விழுச் செல்வம் கல்வி " என்றார். கெடுதல் அல்லது அழிதல் என்பது இல்லாத செல்வம் கல்வி என்பது இக்கூற்றின் பொருளாகும். குல்வி அழிவில்லாதது மட்டுமல்ல என்றும் நிலைத்து நிற்கக் கூடிய செல்வமாகும்.

பிற செல்வங்கள் அழிந்து விடக்கூடியன, ஒருவரிடமுள்ள கல்விச்செல்வம் நெருப்பினால் வேகாது, கள்வர்களால் கொள்ளையிட முடியாது, வெள்ளத்தின-ாலும் அழியாது. குல்வி அழியாத செல்வமாகும். ஏனைய செல்வங்கள் கொடுக்கக் கொடுக்கக் குறையும். ஆனால் கல்வியோ அப்படி அல்ல பிறருக்குக் கொடுக்கக் கொடுக்கத் தான் அது பெருகிக் கொண்டே செல்லும்.இதனால் தான் கல்விச்செலவத்தை அழியாச்செல்வம் என்றும் அழைப்பர்.

பிற செல்வங்கள் நமக்குத் தேவையானவையே ஆனால் கல்வி இல்லாவிடின் பிற செல்வங்களால் பயனேதும் இல்லை. பிற செல்வங்களை தேடவும், அவற்றைப் பயன்படுத்தவும் கல்வியே உதவுகின்றது. எனவே நாம் கல்வியை இளமையிலேயே பெறல் நன்று "இளமையிற் கல்வி சிலைய-ில் எழுத்து " என்பர். இளமையிலேயே கல்வி கற்றால் தொடர்ந்து எப்பே-ாதும் கற்கலாம். ஆகவே, கல்வியை இளமையிலேயேப் பேறல் வேண்டும்

ர.ராகேஷ் பிள்ளை
தரம் 8T

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

K.Yogeshwaran
Sales Executive
071 495 2752

# JANATHA STEELS

Importers & General Hardware Merchants
IMPORTERS & DEALEERS IN BOLT & NUTS,
HAND TOOLS & ENGINEERING TOOLS

20, QUARRY ROAD, COLOMBO-12, SRI LANKA

Gen : 011 2421412, 011 2325807
:011 2338607, 011 2321431
Fax :011 2345667
E-mail :janathas@live.com
Web :www.janathasteels.com
facebook:www.facebook.com/janathasteels

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ESWARAN'S BOOK DEPOT



Wholesale,Retail Dealers in all kind of Book,Wedding Cards, Stationary

NO:126/1,COLOMBO STREET,KANDY.

TEL/FAX:0812-220820

Email:eswarancybervila@gmail.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அம்மா

பத்து மாதங்களில் என் ஜீவன் வெளிவர வேதனையால் துடித்து என்னைப் பெற்ற தாய்க்கு என் முதற்கண் நமஸ்காரத்தை தெரிவிக்கிறேன்

அம்மா எழுதப்படாத - காவியம்
உன் பாசம் வரையப்படாத - ஓவியம்
உன் அன்பு சொல்லாப்படாத - கதை
உன் பொறுமை பேசப்படாத - சாதனை
சின்ன சின்னக் கனவுகள் தான் எத்தனையோ (அம்மா)
எத்தனை கோடி ஜென்மம் எடுத்தாலும்
உன் பாசம் போல வருமா
உன் சக்தி மறுபிறவி என்றொன்றிருந்தால்
உன் செருப்பாகப் பிறக்க வேண்டும்
நான் குடிசையில் இருந்தாலும்
உன்னருகில் இருக்கையில்
மாளிகையில் உள்ளவனாய் வாழ்வேனம்மா

ஏ.ஆஜன்
தரம் 7T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி

சாதனையின் முதற்படி தோல்வி
சோதனையின் இறுதிப்படி வெற்றி
அலட்சியம் வழி செல்வது தோல்வி
இலட்சியம் வழி செல்வது வெற்றி
கடமைக்குச் செய்தால் தோல்வி
கடமையாகச் செய்தால் வெற்றி
பிறர் வெற்றிகளைத் தோற்கடித்தால் தோல்வி
தன் தோல்விகளை தோற்கடித்தால் வெற்றி
நீ மற்றவர்களைப் பற்றிப் பேசினால் (குறை) தோல்வி
உன்னை மற்றவர்கள் பேசினால் (புகழ்) வெற்றி
வெற்றியிலும் பொறாமை தோல்வி
தோல்வியிலும் சகிப்பு வெற்றி
பலத்தால் பிறரை அடக்குவது தோல்வி
பணிவால் தன்னை அடக்குவது வெற்றி
விதியை நினைத்து வாழ்பவனுக்கு தோல்வி
விதியை மதியால் முறியடிப்பவனுக்கு வெற்றி
பிறரை திருத்த முற்படுவதால் வருவது தோல்வி
தன் நடத்தையை மாற்றுவதனால் வருவது வெற்றி

எம்.ஐ.எம்.ஹம்தி
தரம் 10T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஒரு விமானியானால்..

நான் வானவூர்தி செலுத்தும் விமானியானால் எனது விமானத்தை விமான ஓடுபாதையிலிருந்து பக்குவமாக செலுத்தி -விர்- என மேமெ-லழுந்து பறக்கச் செய்வேன். அது வானவெளியில் வானம்பாடி போல் மேலே மேலே பறந்து செல்லும் முகிற் கூட்டங்களுக்கு மேலே அதைப் பறக்கச் செய்வேன். விமானத்திலிருந்து பார்க்கும் போது கீழே உள்ள முகிற் கூட்டங்கள் வெண்பஞ்சுப் பொதிகள் போலக் காட்சியளிக்கும். பரந்த சமுத்திரங்களின் மேலாகப் பறந்து செல்வேன். புனிபடரந்த மலைச்சிகரங்கள் , பசுமையான வயல் வெளிகள் , சோலைகள் என்பவற்றின் மேலாக எனது விமானம் பறக்கும்.

நான் செலுத்தும் விமானம் உலகின் பல்வேறு நாடுகளையும் கடந்து செல்லும் போது அந்நாடுகளின் இயந்கை அழகைக் காணும் வாய்ப்பு கிட்டும். புல்வேறு நாடுகளில் உள்ள விமான நீலையங்களில் எனது விமா-னம் தரித்து நிற்கும் போது அந்நாடுகளின் தொழில்கள் , வாழ்க்கை முை-றகள் , பழக்க வழக்கஙகள் என்பவற்றையும் நான் அறிந்து கொள்வேன்.

நான் செலுத்தும் விமானத்தைக் குறித்த நேரத்தில் குறித்த விமா நிலையத்தில் பாதுகாப்பாக சேர்க்க வேண்டியது என் கடமையா-கும். இப்பாரிய கடைமையினை நான் நண்குணர்ந்து செயந்படு-வேன். விமானத்தில் பயணஞ்செய்யும் பயணிகள் அனைவரது உயிரும் என் கையில் உள்ளதாகக் கருதி மிக்க பொறுப்புணர்வுடன் விமான-த்தை செலுத்துவேன்.நான் விமானியானால் மிக்க மகிழ்வடைவேன்.

ம.டில்ஷான்
தரம் 6T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லை என்று சொல்லிவிடு

பணக்காரன் அறிவுரை கேட்டால் இல்லை என்று சொல்லிவிடு -
அவன் அவமதிப்பதற்காக கேட்பான்

சோம்பேறிகள் கையேந்தினால் இல்லை என்று சொல்லிவிடு -
ஏனெனில் அவன் தொடர்ந்து சோம்பேறியாகவே இருப்பான்

பெரியவர்களை அவமதிப்பவன் உதவி கேட்டால் இல்லை என்று சொல்லிவிடு -
காரணம் அது அவனை மேலும் மேலும் அகங்காரம் ஆக்கும்.

எப்.எம்.அஜ்மல்
தரம் 8T

## முயல்

துள்ளித் துள்ளி ஓடுது பார்
வெள்ளை முயலம்மா
உன்னைத் தொட்டுத் தூக்கி கொஞ்சிடவே
கொஞ்சம் ஆசையம்மா
உருண்டை கண்ணை வைத்து என்னை
பார்க்குது பாரம்மா
புல்லைப் பிடுங்கிப் போட்டவுடன்
கொறித்துத் தின்னுது அம்மா
நான் உன்னை ஏதும் செய்யமாட்டேன்
ஓடி வா இங்கே.

வீ.சக்ஷிதன்
தரம் 6T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்

கண்ணுக்கு நியொரு - கம்பீரம்
கவிதைக்கு நீயொரு - தேன்
காதுக்கு நீயொரு - மொட்டு
ஒலிக்கு நீயொரு - மெட்டு

உருவிற்கு நீயொரு - நங்கை
உருப்பிற்கு நீயொரு - எழில்
உயிருக்கு நீயொரு - சுவாசம்
உலகுக்கு நீயொரு - ஆதவன்

உன்னை புகழாத புலவனின்
புலமையே மடமை
ஆயிரம் ஓசைகளின் மத்தியில்
உன்னொலி எனக்கு உயிரொலி

நீயின்றி ஒலியில்லை
நீயின்றி இசையில்லை
நீயின்றி ஞாலமில்லை
நீயின்றி மொழியில்லை

நீ வளர்த்தாய் - நான் வளரந்தேன்
நீ மலர்ந்தாய் - நான் மணந்தேன்
நீ நானானாய் - நான் மனிதனானேன்
ஞாலத்தின் ஒளியே - தெய்வீக மொழியே வாழ்க

ச.லுஷாந்தன்
தரம் 10D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதியோரை மதித்தல்

முதியோர்கள் எமது நாட்டின் சொத்துக்கள் எனப் போற்றப் படுகின்றனர் அவர்கள் தமது வாழ்க்கையில் பல அனுபவங்களைப் பெற்று எம்மை வழிநடத்துகின்றார்கள்.முதியோரின் அறிவுரைகளைக் கேட்டு நாம் நல்ல வழியில் நடந்து அவர்களை மகிழ்விக்க வேண்டும்.சிறியவர்களாகிய நாம் முதியோரைக் கணம் பண்ண வேண்டும்.நாமும் ஒரு நாள் முதியோராவோம் என்ற எண்ணத்தோடு பண்பாக பழகுதல் வேண்டும்

ஆர்.பிரவீன்.
தரம் 8T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் சுத்தம் பேணுவோம்

சுத்தம் சுகம் தரும் என்பது முதுமொழி. நாம் நோயின்றி வாழ சுத்தம் மிகமிக அவசியம். சுத்தமான நீர், காற்று , உணவு , வசிப்பிடம் என்பன சுக வாழ்வுக்கு இன்றியமையாதது. சுக வாழ்வுக்கு இன்றியமையாத இவற்றை நாம் மட்டும் பெற்றால் போதாது மக்கள் அனைவரும் பெற வேண்டும் அவற்றை அனைவரும் பெறுவதற்கு நாம் வழி செய்ய வேண்டும். சுத்தம் என்றதும் நம்மவரில் சிலர் தாம் மட்டும் சுத்தமாக இருந்தால் போதுமென்று நினைக்கிறார்கள். இது தவறாகும். முற்றவர்களும் சுத்தமாக இருக்க வேண்டுமென்று எண்ணவேண்டும்.

சுத்தம் என்று கூறும் போது முதலில் நமது உடற்சுத்தம் பேணப்பட வேண்டும் அடுத்து நம் வீட்டினுள்ளே சுத்தத்தைப் பேண வேண்டும். ஊடலில் அழுக்கு படியாது உடலை நன்கு தேய்த்து குளிக்க வேண்டும். புற்களை நன்கு துலக்குதல், நகங்களில் அழுக்கு சேராதபடி அவற்றின் நுனியை காலத்துக்கு காலம் வெட்டி சீராக்குதல் , உடைகளை நன்கு தேய்த்துக் கழுவி உலர விட்டு அணிதல் போன்ற நல்ல பழக்கங்களை வழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும் இவை மட்டும் போதாது அழுக்கு நிறைநத இடங்களில் நாம் வாழக்கூடாது. அழுக்குப் பொருட்களை வீடுகளில் சேர விடக்கூடாது . அவற்றைக் கண்டகண்ட இடங்களில் வீசக்கூடாது. உடனுக்குடன அவற்றை அகற்றிவிட வேண்டும். இவற்றை தேங்க விட்டால் தொற்று நோய்கள் , நோய்க்கிருமிகள் இவற்றிலிருந்து தோன்றி மக்களை பாதிக்கும்.இதனால் மக்கள் வாழ்வில் சுகம் கெடும். தொற்று நோய்கள் பரவும். எனவே, நாம் சூழலைப் பாதுகாப்போம்.

எம்.ஏஅம்மர்
தரம் 8T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசம்

வெள்ளைத் தோல் மானிடன் காட்டிய மலையக வாசம்
தமிழனை வைத்தது மறைமுக சிறை வாசம்
நம்பிக்கையால் வந்தது தான் இந்நாசம்
ஆம்.. மலையகத்தமிழன் ஆகிவிட்டான் மோசம்

எட்டுத்திக்கும் பாதம் பட்ட தரையெல்லாம் மதுபானம்
எங்குள்ளது பாரம்பரியத் தமிழனின் மானம்
மாறியதோ? துமிழனின் சிந்திக்கும் கோணம்
சந்தேகம்? ஏம் வாழ்வை அளித்து விட்டோமா தானம்.?

காடழித்துத் தேயிலை நட்டதும் யாம் - இங்கு
கொழுந்தெடுத்து தூளாக அரைத்தவரும் நாம்
சீரிலங்கைத்திருநாட்டை வளர்த்தவரும் நாம் - இன்று
சீரிழந்து பாதையிலே கிடப்பதுவும் நாம்

உறுதிகொள் தமிழனே - நுகர்வதில்லை மதுவாசம் - இங்கு
நாம் வாழ வேண்டும் இது நாம் வளர்த்த தேசம்
வெகுண்டெழுந்திடு நசுக்கப்பட்டால் உண்மையான நேசம்
இலங்கைக் கொண்டாடும் தமிழன்னையின் உயிர்வாசம்

வெ.ஹரிஹம்ஷயன்
தரம் 12E வர்த்தகப் பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி தந்த ஆசானே!!

கல்விக் கண்ணைத் திறந்து கற்பூரத்தை வீசி
-ஆ- என்ற எழுத்தை அமிர்தமாய் சொல்லி
அறிவியலில் நுழைய வழிவகுத்த குருவே

அன்பையும் நீர் உணர்த்தி
பண்பையும் நிர் விதைத்து
ஒழுக்கத்தையும் நீர் உணர்வாக்கியே
நீரென்றும் வாழ்க

வய்.ஏ.எம்.எம்.உமர் அலி
தரம் 10D

## கல்வி

படிப்பு எனும் படியை ஏறு
சொர்க்கம் எனும் சோலை உனக்கு
கிடைக்கும் - புத்தகம் எனும் செடியை
அறிவு எனும் வேரால்
தாங்கும் பூக்கள் எனும்
புனிதமான வாழ்க்கை உனக்கு
கிடைக்கும் - கல்வி எனும் கருவிழியை
இமைகள் போல் பாதுகாத்துக்கொள்
உலகமே அந்தக் கருவிழி வழியே தெரியும்
வாழ்க்கை இருக்கின்றது.
உனக்காக வாழ்ந்து பார்
உன் வாழ்க்கையை கல்வியின் துணையோடு

எம்.ஆர்.அப்துல்லாஹ்
தரம் 10D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி

மேன்மைமிகு புகழ்பெற்ற தமிழ் மொழி
அது என்றைக்கும் அழியாத முதுமொழி
நல்லறிவுரை கூறும் தமிழ் மொழி
அது எப்போதும் காட்டுவது நல்வழி

தமிழில் நிலைத்து நிற்கும் சொற்கள்
அது என்றுமே அழியாத கற்கள்
தமிழைக் கற்பது ஒரு பெருமை
அதை என்றுமே மறவாதது ஓர் திறமை

க.மார்க்
தரம் 11T

# பொன்மொழிகள்

தாயின் இதயம் என்றும் வாடாத மலர் - கவிஞன்

- பிரசவத்தை நினைத்தால் பெண்ணைப் போன்ற பாவச்சுமை உலகில் இல்லை. ஆனால் தாய்மைக்குரிய சிறப்பை என்னும் போது அந்தப் பெருமை ஆண்களுக்கும் கிடைப்பதில்லை - பெர்னாட்ஷா
- தாயின் இதயம் குழந்தையின் பள்ளிக்கூடம் - அனுபவசாலி
- தாயை யாருடனும் ஒப்பிடலாகாது : அவள் ஒப்பற்றவள் - பெல்ஜியம்
- எத்தகைய தவறையும் மன்னிக்கும் நீதிமன்றம் ஒன்று உண்டு என்றால் அது தாயின் இதயமே - முஹம்மது நபி (ஸல்)

சீசன்
தரம் 8T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையிற் கல்வி

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்பது முதுமொழி. நாம் கற்க வேண்டியவற்றை இளமைப்பருவத்திலேயே கற் வேண்டும். கற்பதற்குரிய பருவம் இளமைப் பருவமே இந்த உண்மையை சகலரும் ஏற்றுக் கொள்வர்.

இளமைப்பருவம் கவலையற்ற பருவம். இப்பருவத்தில் நாம் பெற்றுக்கொள்ளும் அறிவும் , திறனும் , அனுபவமும் நமது எதிர்கால வாழ்விற்கு அடிக்கற்களாக அமைய வல்லன.எனவே தான் பெரியோர்கள் இளமையிற் கல என்று வலியுறுத்தினார்கள். இளமைப் பருவத்தில் நாம் பெறும் கல்வி கல்லிற் பொறித்த எழுத்து போல் என்றும் அழியாது இருக்கும். முதுமையிற் பெரும் கல்வி பல்வேறு காரணங்களால் நிலைத்து நிற்காது. இதனையே ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? எனும் பழமொழி நினைவூட்டுகின்றது.இளமையில் பெறும் கல்வி நம் உள்ளத்தைப் பண்படுத்த வல்லது. நல்லது எது? கேட்டது எது? ஏன அறிந்து கொள்ள உதவுகின்றது. நமது வருங்கால வாழ்வினை வளம் நிறைந்ததாக அமைத்துக்கொள்ள உதவுகின்றது.

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பது முதுமொழி நாம் பெறும் கல்வியானது வெறும் ஏட்டுக்கல்வியாக மட்டும் இருக்கக் கூடாது. அது வாழ்க்கைக்கு உகந்த கல்வியாக மட்டும் இருத்தல் வேண்டும். இவற்றை நன்குணர்ந்து இளமையிலே பயன் தரும் கல்வியை பெற்றிட முயல வேண்டும்.

எம்.ஏ.எம்.முஸ்னி
தரம் 8T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு

ஆயிரம் கோடி நட்சத்திரம்
விண்ணில் இருந்தாலும்
இரவுக்கு அழகு நிலவுதான்
ஆயிரம் உறவுகள்
மண்ணில் இருந்தாலும்
வாழ்க்கைக்கு அழகு
நல்ல நட்புதான்

இதயம் எத்தனை முறை
காயப்பட்டாலும் மனதுக்குப்
பிடித்தவற்றை மறக்காது
காரணம் இதயத்துக்கு
நடிக்கத் தெரியாது
துடிக்க மட்டுமே தெரியும்.

விழிகளைக் காயப்படுத்தும்
துன்பங்கள் வேண்டும்
அப்போது தான்
கண்ணீரைத் துடைக்கும் கைகள்
யாருடையது என்று தெரியும்

மொஹம்மட் அகீப் மியன்டாட்
தரம் 10D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Naleera Fareekdeen** *LL.B (Colombo)*

*Attorney-at-Law, Notary Public &*

*Commissioner for Oath*

**Residence:**
# 111,
Lady Gordon's Drive,
Kandy 20000.

Mobile: 0777-488-309,
Office : 081-499-4109

**Office:**
# 434, Ground Floor,
Lawyers Office Complex,
William Gopallawa Mawatha,
Kandy 20000,
Sri Lanka.

e-mail: naleerafareekdeen@yahoo.com

WITH BEST COMPLEMENT FROM,

ANTONIAN BROTHERS,

FARHAN ARSHAD (13T COM)

FARHAN ABDULLAH (5T)

FARHAN MUHAMMEDH (1T)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதை

அன்பு, பாசம், நேசம்,
அம்மாவிடம் கற்றுக்கொள்ளுங்கள்
கல்வி, அகரமுகர எழுத்து,
போட்டி, ஜெயம், புகழ், பெருமை,
ஆர்வம், கொள்கை, நீதி, நியாயம்,
கண்ணியம், கட்டுப்பாடு, கடமை,
தானம், தருமம், நல்லொழுக்கம்
அப்பாவிடம் கற்றுக்கொள்ளுங்கள்
அறிவு, வீரம், அடக்கம், பொறுமை,
நிதானம், நேர்மை, பணிவு, துணிவு.
வாழ்வு, உழைப்பு, உண்மை, ஊக்கம்
கடவுளிடம் கற்றுக்கொள்ளுங்கள்
அமைதி, சாந்தம், தூய்மை,
நிம்மதி, தியாகம், புண்ணியம்,
குணம், மனம், சமயம், சமாதானம்
ஆசானிடம் கற்றுக்கொள்ளுங்கள்

எஸ்.சஜிதன்
தரம் 6T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்

தமிழோடு நாம் கொண்ட மோகம்
எந்த ஜென்மத்திலும் தீராத தாகம்
தீ வந்து உடல் சுட்ட போதும்
வேகாது ! வேகாது ! தமிழ் தாகம்

தமிழே எம் உயிரின் பாகம்
தமிழின்றி உலகில் இல்லை வேதம்
தமிழென்றால் உலகில் ஒரு வேகம்
தமிழுக்காய் வாழ்வதே உலகில் யாகம்

தமிழனாய் வாழ்வது ஒரு யோகம்
தமிழில் தீ சொற்கள் சேர்ப்பது சோகம்
தமிழனாய் உயிரை துறப்பது தியாகம்
தமிழனாய் புதுயுகம் படைப்பது வியூகம்

தமிழால் கவி மழை பொழிவது மேகம்
முன்தோன்றிய முது மொழி உலகை ஆளும்
தமிழுக்கு இழுக்கெனில் உளம் நோகும்
தமிழுக்காய் உயிரும் போகும்

ச.லுஷாந்தன்
தரம் 10D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

1.குரலோசை வரும் பின்னே : மணியோசை வரும் முன்னே?

தொலைபேசி

2.வந்தால் கொண்டாட்டம் : வராவிட்டால் திண்டாட்டம் ?

மழை

3.நடைக்கு உதாரணம் சொல்லுவர் : குறுக்கே நடந்தால் முகம் சுழிப்பர்?

பூனை

4.ஆடி ஆடி நடப்பான் , அமைதியாக அதிர வைப்பான்?

யானை

5.மனிதன் செய்யா குடை : மழைக்கு பிடிக்க முடியாத குடை ?

காளான்

6.உள்ளே இருந்தால் ஓடித் திரிவான் : வெளியே வந்தால் விரைவில் மடி-வான் ?

மீன்

7.காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும்?

பேனை

8.வெளியே விரியும் : உள்ளே சுருங்கும் ?

குடை

9.கத்தியினறி இலைகளை வெட்டுவான் அவன் யார்?

வெட்டுக்கிளி

10.ஒளி கொடுக்கும் விளக்கல்ல : சூடு கொடுக்கும் நெருப்பல்ல ?

ஆதவன்

நஸ்ஹத்
தரம் 6T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# CEAT

**DISTRIBUTORS**

**FOR KANDY AND BADULLA AREAS**

No. 218, Nuwara-Eliya Road, Mahara, Gampola.

Tel/Fax : 0812354324

Mobile : 0777901421

Email : newmstyretraders@yahoo.com



MS


# New M.S. Tyre Traders

**Radial type tyres suitable for car, van, motor bike and 3 wheels**

Best Wishes From

Nagarajah Nanthakumar (G'92)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




BUILDING
ON TRUST

# RAYON ENTERPRISES

IMPORTERS, GENERAL
HARDWARE, MERCHANTS

NO.131, BANDARANAYAKA MAWATHA
COLOMBO-12
TEL/FAX-0112447441

EMAIL - RAYONENTERPRISES@GMAIL.COM

HOTLINE - 0772071896


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

S.G. VISVAKULA

Insurance Agent

BRILLIANCE INSURANCE

BROKERS COMPANY (PVT) LTD.

No 47, King Street, Kandy.

081-2229229 077-3289719 visvakulasg@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

1.உலகிலேயே பரப்பளவில் சிறிய நாடு எது?
வத்திக்கான்

2.உலகிலேயே பரப்பளவில் மிகப்பெரிய நாடு எது
ரஷ்யா

3.உலகிலேயே மிகப்பெரிய தீவு எது?
கிறீன்லாந்து

4.உலகிலேயே அகலமான நீர்வீழ்ச்சி எது?
நயாகரா நீர்வீழ்ச்சி

5.உலகிலேயே மிக வறண்ட பாலைவனம் எது?
ஆடாகாமா பாலைவனம்

6.உலகிலேயே ஆயிரம் ஏரிகளின் நாடு என அழைக்கப்படும் நாடு எது?
பின்லாந்து

7.இதயத்தில் எத்தனை அறைகள் உள்ளன?
4

8.அமெரிக்காவின் மிகப்பெரிய மாநிலம் எது?
அலாஸ்கா

எப்.ஆர்.அனோஷியன்
தரம் 6T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sakthi Textiles

## Yatiyanthota

## 076 565870

## CENTRAL ESSENCE SUPPLIERS

(Suppliers to Confectioners & Bakers)

Importers & Distributors of Quality Essences,
Colours & Chemicals for Food Confectionery & Baking

No. 76B, Kings Street, Kandy, Sri Lanka.
Tel: +94 81 2224187, +94 81 4933008
E-mail: ennssykandy@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்தனைத்துளிகள்

1.எல்லா ஊரும் நம் ஊரே: எல்லா நாடும் நம் நாடே

2.அனைவரும் நம் உறவினர்

3.தீமைக்கும் , நன்மைக்கும் நாமே காரணம்

4.பெரியோர் என யாரையும் வியந்து போற்றாதீர்

5.சிறியோர் என யாரையும் இகழாதீர்

6.தன்னலமாய் வாழாதீர்

7.பிறர் நலம் பேணி வாழ்வீர்

8.துன்பம் கண்டு துவளாதவரே வெற்றி காண்பார்

9.ஊள்ளம் உயர்ந்தவனானால் வாழ்வும் உயரும்

10.வெற்றி கண்டு மயங்காதீர்

11.வாழ்க்கை துணை என்றும் ஒருவனே

12.காற்று , உணவு , மொழி முதலியவற்றில் தூய்மை பேணுவீர்

13.சுற்றுப்புறத் தூய்மையே நல்வாழ்வுக்கு அடிப்படை

14.உண்மைப் பேசி உள்ளத்தை தூய்மையாக்குவீர்

15.அன்பே வாழ்வின் அடிப்படை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16.அருள் வாழ்வே அற வாழ்வு

17.நல்லது செய்யாவிட்டாலும் தீயது செய்யாதே

18.சான்றோன் ஆக்குதல் பெற்றோர் கடமை

19.நல்லொழுக்கம் தருதல் ஆளுவோர் கடமை

20.செல்வம் அழியும் : அறிவு அழியாது

21.துன்புறுத்துவர் துன்பம் காண்பார்

22.செல்வம் பிறருக்கு உதவவே

23.தானும் பயன்படுத்தாத பிறருக்கும் உதவாத செல்வரை விட ஏழையே செல்வந்தன்

24.அறவழியில் பொருள் ஈட்டுக

25.பிறரை உயர்த்த நீ உயர்வாய்

26.பிறர் வாழ நீ வாழ்வாய்

27.மறதியை மற

28.விலையை மிகுதியாகப் பெறாமல் பொருளை குறைவாகக் கொடுக்காமல்
29.வணிகம் செய்க

30.குறுக்கு வழியில் பணம் தேடாதே

க.டிதுர்ஷன்
தரம் 10T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2020 A/L BATCH

S.S.MOHAMED ISHAK
SHOWROOM MANAGER
0773482239

SHRI NADIKA
GEM & JEWELLERY

NO.100.Colombo Street,Kandy
Phone:0812228100\0812228101
email: shrinadika77@gmail.com

www.shrinadikajewellery.com

Digitized by Noolaham Foundation

# ஆசான்

அன்புள்ளம் கொண்ட அருமை
ஆசான்களே - அறிவை வித்திட்ட
இனியவர்களுக்கு - இன்று மட்டுமல்ல
ஈருலகிலும் அருள் புரிவான் ஆண்டவன்
உண்மையை உரக்கச் சொல்லி
ஊமையும் பாஷை பேச
எத்தனை இனிய முயற்சிகள்
ஏழுவானங்கள் எட்டிடும் வரை
ஐயமின்றி வையகம் வாடி
ஒற்றைக் கை எழுதுகோல் பிடித்து
ஓடும் வயதை அறிவால் படைத்த - இனிய
ஔவையார் நம் ஆசான்கள்
பத்து மாதம் சுமந்து பெற்று
பத்து வயதின் பாதி சென்று
பெற்று வளர்த்த முத்துக்களை
தத்தெடுக்கும் தாய்மார் என்றால்
தியாகம் கொண்ட ஆசான்கள் தான்
அடி மனதின் அன்புக்களமாய் - பிடி
விரலில் அறிவுக் களமாய்
அடியேன் போல் ஆயிரம் கோடி
அறிவுக்களஞ்சிய உரிமைக்குரல் ஆசான்களே

பர்ஹத்
தரம் 7T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஆய கலைகள் 64

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே இருப்பளிங்கு வாராதிடர்.
ஆய கலைகள் அறுபத்து நான்கும் அவைதான் :

எழுத்திலக்கணம்
எழுத்தாற்றல் (லிகிதம்)
கணிதம்
மறைநூல் (வேதம்)
புராணம்
இலக்கணம்
நயநூல்
சோதிட சாஸ்திரம்
அறநூல்
யோக சாஸ்திரம்
சகுன சாஸ்திரம்
சிற்ப சாஸ்திரம்
வைத்திய சாஸ்திரம்
உருவ சாஸ்திரம்
இதிகாசம்
வனப்பு
அலங்காரம்
மதுர மொழிவு
நாடகம்
நடனம்
ஒலிநுட்ப அறிவு
யாழ் (வீணை)
குழல்
இன்னிசை
பிறவுயிர் மொழியறிகை
மகிழுறுத்தம
நாடிப்பயிற்சி
கலுழம்
இழப்பறிகை
மறைத்ததையறிதல்
வான் செலவு
வான்புகவு
மிருதங்கம்
தாளம்
வில்வித்தை
பொன் நோட்டம்
தேர்ப் பயிற்சி
யானையேற்றம்
குதிரையேற்றம்
மணிநோட்டம்
மண்ணியல்
போர்ப்பயிற்சி
மல்யுத்தம்
கவர்ச்சி
ஒட்டுகை
நட்புப் பிரிவு
காமநுஸல்
மோகனம்
வுசியம்
இதளியம்
சூனியம்
வாற்கட்டு
புதையற்கட்டு
விந்துக்கட்டு
நாவுக்கட்டு
கண்கட்டு
முந்திர சாஸ்திரம
வள்ளிக்கட்டு
நீர்க்கட்டு
அழற்கட்டு
மஹேந்திரஜாலம்
இந்திரஜாலம்
அதிருசியம்
கூடு விட்டு கூடு பாய்தல

ச.தனுக்ஷன்
தரம் 10T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

WL

# WHITE LINE

## TEXTILE

No. 194 A, KEYZER STREET,
COLOMBO -11
TEL : 011-2421375

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்திப்போம்.....

புரியாதது என்பது நீ - அறியாதது
முடியாதது என்பது நீ - முயலாதது
தெரியாதது என்பது நீ - தேடாதது
மறதி என்பது நீ - மீட்டாதது
கடினம் என்பது நீ - கற்காதது
தவறு என்பது நீ - திருத்தாதது
குறை என்பது நீ - நிறைக்காதது
களைப்பு என்பது நீ - கணிக்காதது
குழப்பம் என்பது நீ - குறிக்காதது
துக்கம் என்பது நீ - தொலைக்காதது
தோல்வி என்பது நீ - தோற்கடிக்காதது


அ.ர.அப்துர் ரஹ்மான்
தரம் 8T

## மூன்றெழுத்து

அன்னை என்னும் மூன்றெழுத்தால் - பிறந்தோம்
அன்பு என்னும் மூன்றெழுத்தால் - வளர்ந்தோம்
பள்ளி என்னும் மூன்றெழுத்தால் - சேர்ந்தோம்
கல்வி என்னும் மூன்றெழுத்தால் - கற்போம்
போட்டி என்னும் மூன்றெழுத்தால் - எதிர்கொள்வோம்

க.திவாகர்
தரம் 7T


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



CITY TEX

Wholesale & Retail Dealers in
Textiles & Tailoring Items

56, KOTUGODELLA VEEDIYA
KANDY - SRI LANKA
Tel: 081 2238833
2223323
Fax: 081 2200866



ANCHOR STEELS

Importers,Scaffolding & General Hardware Merchants

No.329 ,Old Moor Street,
Colombo

Tel:2424226
Fax:2424

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒழுக்கம் விழுப்பம் தரும்.

ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும். என்று வள்ளுவர் கூறியுள்ளார். ஒருவரது சிறப்பான வாழ்வுக்கு சிகரமாக அமைவது ஒழுக்கமேயாம். ஒருவரிடம் ஒழுக்கம் இல்லையென்றால் உயர்வும் சிறப்பும் இல்லாமல் போகின்றது. ஒழுக்கமுடையோர் நிச்சயம் உயர்வடைவர். தீயொழுக்கம் என்றும் துன்பத்தையே தரும் மனிதன் மனிதனாக வாழ்வதே ஒழுக்கமா-கும். ஒழுக்கம் நாம் வாழ்ந்து வரும் வாழ்வின் இலட்சியமாக அமைய வேண்டும். ஆந்தவகையில் ஒழுக்கத்தைப் பேணி நாம் உயர்வடைவோம்.

ஊம்.உம்.உம்.றைஹான்
தரம் 6T

# நட்பு

வழிமாறிச் சென்றபோது நல்வழி சொன்ன - நட்பு
பள்ளத்தில் விழுந்தபோது கைகொடுத்த - நட்பு
ஏக்கத்தில் தோள்சாய தோள் கொடுத்த - நட்பு
அரத்தமில்லா வாழ்க்கைக்கு அரத்தம் கொடுத்த - நட்பு
மனிதத்தன்மையில்லா உலகில் மனித்தன்மையை உணர்த்திய - நட்பு
பணக்காரனை விட ஏழையை அதிர்ஷ்டசாலியாய் தோன்றச்செய்யும் - நட்பு
மனித பூமியை சொர்க்கமாக்கிய - நட்பு

ஏ.து.பிரவீன் ஆகாஷ்
தரம் 13 உயிரியல் விஞ்ஞானப் பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் - மேற்கத்தேயர்களின் நவீன ஆயுதம்

சிலந்தி வலைக்குள் சிக்குண்ட
சிறகொடிந்த சிறுபூச்சி போல
போதையினுள்ளே மாட்டிச் சிக்கி
திணறிக் கொண்டிருக்கும் இளைஞர்களே!
மாற்றம் வேண்டும் உம் வாழ்வில்!
நாளைய உலகின் தலைவிதி நீங்கள்!
நாளைய உலகைத் தாங்குவது நீங்கள்!
நாளைய உலகை இயக்குவது நீங்கள்!
நீர் தான் மாற வேண்டும்.
உம் மாற்றம் தான் சமூகத்தின் ஏற்றம்.
ஆகவே, நீர் தான் மாற்றம் காண வேண்டும்.
இளமையை இழந்த பிறகு யோசிப்பதில்
பலனில்லை, பயனில்லை!
இப்பொழுதே மாற்றம் வேண்டும்.
போதை என்பது மேற்கத்தேயத்தின்
மறைமுக ஆயுதம்!
தாக்குவது அவர்கள்!!
தாக்கப்படுவது நீங்கள்!!
பலனடைவது அவர்கள்!
சீரழிந்து மடிவது நீங்கள்!
ஆவர்களுக்கு முக்கியம் உமது உயிரல்ல,
அவர்களது உயிரை விஞ்சிய பணமே !!!
அவர்களோ! புடித்தார்கள், யோசித்தார்கள்,
முன்னேறினார்கள் செழிப்பாக வாழ்ந்தார்கள்.
ஏம்மைப் பார்த்தார்கள்.
ஏம் முன்னேற்றத்தைக் கண்டாரகள்
பொறாமை கொண்டார்கள்
எம்மை தட்ட நினைத்தார்கள்
உருவாக்கினார்கள் போதைப் பொருளை
பெயரிட்டனர் நவீனமென்று (குயுளுர்ஐழுடீ)
விநியோகித்தார்கள் எமக்கு,
எம் நிலை !!!??
வளர்ந்து கொண்டிருந்தோம், முன்னேறிக் கொண்டிருந்தோம்,
போதைப் பொருள் வந்தது சந்தைக்கு,
விளம்பரப்படுத்தியது சினிமா!!!
பணம் கைமாறியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களது ஆயுதத்தால் தாக்கப்பட்டோம்.
அவர்களது திட்டம் பலித்தது.
ஏம் நிலை இழிநிலை ஆனது!!!
தேவையாயிது ??? பணம் கொடுத்து நோயை வாங்குகின்றோம் !!
பணம் கொடுத்து சீரழிகிறோம் !!
பணம் கொடுத்து செத்துத் தொலைகிறோம் !!
ஏன் இந்நிலை?? தேவையா !!??
வேண்டாம்!! வேண்டாம் !! இனியும் வேண்டாம் !!
போதை வேண்டாம் !!
மாறுவோம் !! நாம் மாறுவோம் !!
மாங்காய் போன்ற எமது நாட்டை
மாங்கனி ஆவதைத் தடுக்கின்றனர்.
நாமே தடுக்கின்றோம் போதையால் !!
இன்றிலிருந்து மாறுவோம் !!
புதுயுகம் படைத்த உலகைக் காண முயல்வோம்
விழைவோம் !! அடைவோம் !!

அம்ஹர் முஹம்மத்
தரம் 11T

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With best compliments from*

# SRIYANI
## DRESS POINT
*for the Latest life style*

KEGALLE / KURUNEGALLA / KANDY / MATALE

* Peradeniya Road
* Yatinuwara Street

www.sriyanidresspoint.lk
https://www.facebook.com/sriyani dress point srilanka

Shiyali

A MEMBER OF SRIYANI DRESS POINT
No. 08, Dalada Veediya - Kandy

S.KARUNAGARAN
CIVIL ENGINEER

SKY

# SKY ENGINEERS

*Architectural Astrological House Plans.
*Structural Designing & Drawing
*Estimation & BOQ
*Civil Engineering Consulty
*Construction
*Site Visits & Management

# 515/A.Peradeniya Road ,Kandy
Email: skyengkandy@gmail.com
Tel/Fax: 081-2232485 Mobile:076-7620110

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலிகை வளம் - குப்பைமேனி

மனிதனுக்கு ஏற்படும் பிணிகளை நீக்கும் அருமருந்துகளான மூலிகைகள், இயற்கையின் ஏற்பாட்டில், தேவையுள்ள பகுதிகளில், தேவையான மூலிகை என்கற வகையில் தானாகவே விளைந்து கொண்டிருக்கின்றன. இதையெல்லாம் சரியாகக் கண்டுபிடித்து உண்டு, தங்களுக்கு ஏற்படும் நோய்களைத் தீர்த்துக் கொள்ளும் வித்தையை, ஒவ்வொரு உயிரினத்துக்கும் இயற்கையே கடத்தி வைத்திருக்கிறது. ஆனால், வியாபார நோக்கோடு, இதையெல்லாம் திட்டமிட்டு மறக்கடித்துவிட்டனர்... கடந்த இருபது, முப்பது ஆண்டுகளில்! அத்தகைய மூலிகைகளை மீண்டும் கையில் எடுக்கவும்... அவை பற்றிய புரிதலை உண்டாக்கவுமே.... மூலிகை வனம்' எனும் இப்பகுதி இங்கே விரிகிறது. இந்த இதழில் வீதியெங்கும் விளைந்து கிடக்கும் குப்பைமேனி பற்றி அறிந்து கொள்வோம்...

குப்பையில் கிடக்கும் கோமேதகம்',
சேற்றில் முளைத்த செந்தாமரை' எனச் சொல்வார்களே...

அதற்கு முற்றும் பொருத்தமானது, குப்பைமேனி. வாய்க்கால், வரப்பு, சாலையோரங்கள், குப்பைமேடுகள் எனக் காணும் இடங்களிலெல்லாம் துளிர்த்துக் கிடக்கும் குப்பைமேனி... மனிதனைக் காக்கும் அற்புத மூலிகை என்பது, நம்மில் எத்தனை பேருக்கு தெரியும்? குப்பையான மேனியைக் குணப்படுத்தும்! உணவே மருந்து... மருந்தே உணவு' எனச் சொன்ன முன்னோர்களின் அறிவை, கை கொள்ளாததன் விளைவு, பல்வேறு பிணிகளால் பின்னப்பட்டுக் கிடக்கறது, நம் உடம்பு. இப்படி, நோயால் குப்பை போல் ஆகிவிட்ட மேனியை குணப்படுத்துவதால்தான் இதற்கு குப்பைமேனி என்ற பெயர் வந்திருக்குமோ... என ஆச்சரியப்படும் வகையில் இருக்கிறது, இதன் பயன்பாடு. குப்பைமேடுகளில் வளர்வதால்... இதற்கு குப்பைமேனி என்ற பெயர் வந்ததாகவும் சொல்லப்படுகிறது. பூனைவணங்கி! இதை, மார்ஜால மோகினி' என வடமொழியில் அழைக்கிறார்கள். மார்ஜாலம்' என்றால் பூனையைக் குறிக்கும். பூனைவணங்கி' என்ற பெயரும் இதற்கு உண்டு.

குப்பைமேனியில் உள்ள கந்தகச்சத்து, பூனையின் கண்களுக்கு எரிச்சலைக் கொடுப்பதால், அதன் அருகில் வரும்போது பூனையானது கண்களை மூடிக் கொள்ளும். அதேசமயம், ஆரோக்கிய குறைவான உணவை உண்பதால் பூனைகளுக்கு ஏற்படுகிற நஞ்சினை நீக்குவதற்கான மருந்து, குப்பை மேனியில்தான் இருக்கிறது. எனவே, கந்தகத் தாக்குதல் குறைவாக இருக்கும் இரவு வேளைகளில் சென்று, குப்பைமேனி இலைகளை பூனைகள் உண்ணும். அதனால்தான் பூனைவணங்கி என்று பெயர் வந்தது என்று இதற்கு விளக்கம் சொல்கிறார்கள். குப்பைமேனி சிறுசிறு கிளைகளுடன் உள்ள அடர்த்தியான செடி. இலையின் ஓரங்கள் ரம்பத்தின் பற்களைப் போன்று இருக்கும். பச்சை நிறத்தில் மிளகு போன்ற காய்கள் இதில் காய்க்கும். இது, விதை மூலமாக இனப்பெருக்கம் செய்யப்படுகிறது. இதன் இலைகளின் அமைப்பே வித்தியாசமானது. மாற்றடுக்கில் அமைந்துள்ளதால், உச்சிவெயில் நேரத்தில் ஓர் இலையின் நிழல், அடுத்த இலையின் மீது விழாது. குடற்புழு நீக்க மருந்து! குப்பைமேனி குணமாக்கும் நோய்களின் எண்ணக்கை ஏராளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடித்தால்... பேதியாகி மலத்துடன் வயிற்றுப் பூச்சிகள், கிருமிகள் வெளியேறிவிடும். இலையை பொடி செய்து சாப்பிட்டும் பூச்சிகளை வெளியேற்றலாம். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்குமான அற்புதத் தீர்வு, இதன் இலையும், வேரும். குழந்தைகளுக்கு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை குடற்புழு நீக்கம் செய்யச் சொல்கறார்கள் மருத்துவர்கள். இதற்கு ஆங்கில மருந்துக்கடையில் ஒரு குப்ப-ியை வாங்கி பயன்படுத்தி வருகிறோம். அதைவிட குப்பைமேனி இலையை அரைத்து சாறெடுத்து, குழந்தைகளுக்கு ஒரு தேக்கரண்டி கொடுத்தாலே போதுமானது.

வயது வித்தியாசமின்றி பலரும் இன்று மூல நோயால் அவதிப்படுகிறார்கள். காரமான உணவு உண்பது; சரிவிகித உணவாக இல்லாமல் புரதம் நிறைந்திருக்கும் உணவை மட்டும் உண்பதால் ஏற்படும் மலச்சிக்கல் ஆகியவைதான் மூல நோய்க்கு முக்கியமான காரணங்கள். இந்நோய்க்கு எளிதான தீர்வு, குப்பைமேனி. அறுவை சிகிச்சைக்கும் அசைந்து கொடுக்காத மூலத்தை, நிர்மூலமாக்கும் ஆற்றல் குப்பைமே-னிக்கு இருக்கிறது. குப்பைமேனியை வேருடன் பிடுங்கி, நிழலில் உலர்த்தி சூரணம் செய்து, 5 கிராம் அளவு எடுத்து பசு நெய்யோடு சேர்த்து 48 நாட் களுக்கு காலை, மாலை என இருவேளைகளும் உண்டு வந்தால்... ஆசன மூலம், பக்க மூலம், ச ந்தி மூலம், மேக மூலம், சரக்கண்ட மூலம், மாலை மூலம், கொடி மூலம், கண்டமா-லை என எட்டு வகையான மூல நோய்களும் கட்டுப்படும். தோல் நோய் குண-மாகும்! ஆஸ்துமா, சைனஸ்... போன்ற நோய்களைக் குணமாக்கும் ஆற்றலும் குப்பைமேனி இலைக்கு உண்டு. இது, உடலில் வெப்பத்தை உண்டாக்கி, நாள்பட்ட கோழையைக்கூட வெளியேற்றி விடும். இலையை உலர்த்தி சூரணம் செய்து, சின்ன நெல்லிக்காய் அளவு தேனில் கலந்து கொடுத்து வந்தால்... இருமல், இரைப்பு, கபம் குணமடையும். சொறி, சிரங்கு போன்ற பல்வேறு தோல் நோய்களுக்கு, குப்பைமேனி தைலத்தை 15 நாட்கள் தொடர்ந்து தடவி வந்தால்... ஸ்கின் பிராப்ளமா... எனக்கா?' எனக் கேட்கும் அளவுக்கு அடடா' மாற்றத்தை உணர்வீர்கள். இப்படி, தலைவலி, வாத நோய், படுக்கைப் புண்கள்... என இது தீர்க்கும் நோய்கள் ஏராளம், ஏராளம். தான், குப்பையில் வளர்ந்தாலும் மனிதர்களின் நோய்களை அறுக்கும் குப்பைமேனி ஆராதிக்க-ப்பட வேண்டிய ஒன்று.

செல்வன் சி. சுரேஸ்கோபி
தரம் 13 விஞ்ஞான பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை

நம்பிக்கை ...வை

நம்பிக்கையில்தான்
நகருகிறது
வாழ்க்கை ...!

உன்
நாடி ..நரம்புகளில்
இரத்தவோட்டத்தை
மாற்று...

இளமையாய்
நம்பிக்கையை
ஊற்று...

வறண்ட பொழுதினில்
வாழ்வின் எல்லைவரை
செல்லும் மனது ...

அப்பொழுதினில்
நாளைய உலகினை
நம்பிக்கை வேர்களே
நன்றியுடன் உரைக்கும்

விடிவோம் என்றுதானே
வீழ்கிறான் சூரியன் ...

வளர்வோம் என்றுதானே
தேய்கிறான் சந்திரன் ...

வீழ்ச்சியும்...
தேய்தலும்...
தேகத்திற்குத்தான்..?

ஆனால்
மனதிற்கு ...!

தவறெனில்
தாய் புவியின்
தலைவிதியை
மாற்றிவிடு ...

தரணி ஆள
தளிர்களுக்கு
தன்னம்பிக்கை
ஊற்றிவிடு ...

காயங்கள்
ஆறிவிடும்...
கவலைகள்
ஓடிவிடும்...

கனவுகள்
கூடிவரும்...
காவிரியிலும்
நீர்வரும்...

மாற்றங்கள்
துளிர்விடும் ...
மறைவுகள்
உயிர்பெறும்...

மனித மனம்
என்று
ஒளிபெறும் ...?

Jude Dilushan

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Torrino Steels

Importers & General Hardware Merchants

No. 39, Quarry Road, Colombo-12, Sri Lanka.
Tel : 244 0955, 242 3711
Fax : 234 8219

**SELLIAH PRASANNA** 0777-842457
Managing Partner

# NEW CENTRAL HARDWARES

General Hardware Merchants & Estate Suppliers
Dealers in Power Tools, Engineering Tools,
Sanitary ware, GI Fittings and Bolts & Nuts.

No. 39, Colombo Street,
Kandy - Sri Lanka

Tel : 0812-223242
Fax : 0812-239510
Hotline : 0773-526626
E-mail : prasansel@yahoo.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கடவுள் கை மறித்தார்

தாமோதரன் அடிக்கடி சுவர்க்கடிகாரத்தைப் பாத்துக்கொண்டான் .
அதிகாலை 5.25
அம்மா படித்துப் படித்துச் சொல்லி இருந்தாள்
காலை நேரங்கள் செலவு ஆவதே தெரியாது தாமு .தூங்கிடாதே வெள்ளிக்கிழமை நம்மோட வள்ளி முருகன் கோவிலில் சந்தனக் காப்பு .5.50 க்கு சரியா கண் திறப்பு வசு அண்ணா சொல்லியிருக்கிறார்.லேட் பண்ணினியோ நம்மாத்துக்கே வந்து திட்டுவார்.சரியா போயிடு என்று ஆணியடித்தார் போலச் சொல்லியிருந்தது ஞாபகம் வந்ததால்தான் தாமு கடிக்காரத்தை அடிக்கடிக் கவனித்துக்கொண்டான்.

ஆனால் தாமுக்குக் கோவில் போவதற்குக் கஷ்டமில்லை .ஏதாவது வேண்டுதலோடு கடவுள் முன் நிற்கக் கூச்சமாக இருப்பதைத்தான் அம்மாவிடம் வேண்டாம் என்று சொல்வான் . அதற்கு அவன் அம்மா பாக்கியலட்சுமி , சும்மா இருடா தெய்வத்தை விட நம் சேமத்தைப் புரிந்து கொள்ள யாரால் முடியும் ? தெய்வத்தைக் கேட்காம சாதாரண மனுசாள்கிட்டயா கேக்கச் சொல்ற அபிஷ்டோ என்பாள்.

அம்மா நமக்கு இத்தனை கொடுத்த தெய்வத்துக்கு எப்பத் திருமணம் நடத்தனும்ன்னுத் தெரியாதா ? கேட்டுத்தான் பெறனுமா என்று சலித்துக்கொள்வான் .ஆனால் அம்மா விடமாட்டாள் .இது ஆம்படையான் இல்லாத வீடு .என்னால அங்க இங்க ஓடி உனக்கு ஒருத்திய தேடித்தரமுடியாது .அந்த வள்ளி முருகன்தான் உனக்கு அவரைப்போல லட்சணமா இந்திரன் மகளான தெய்வானையைப் போல ஒருத்தியைத் தரவேண்டும் என்று வேண்டிக்கொள்வாள் .வள்ளி முருகன் கோவிலில் அம்மா தெய்வானையை வேண்டுவதன் அர்த்தம் தாமுவுக்கு உள்ளரப் புரியும் .என்ன இருந்தாலும் வள்ளி இரண்டாவது மனைவிதானே ?
அம்மாவுக்குத் தொடுப்பா இந்தக் கோவில் குருக்கள் வாசு அண்ணாவும் சும்மா இருப்பதில்லை .
தாமு ஜாதகத்தில குரு தோஷம் இருக்கிறதால ஷஷ்டி அன்னைக்கு ஒரு சந்தனக்காப்புப் போட்ட நல்லதுன்னு அம்மாவிடம் சொல்லி ஏற்பாடு செய்துவிட்டார்.

அம்மா திருச்சி போயிருக்கிறாள்.நெருங்கிய சொந்ததின் தவிர்க்க முடியாதவர் திருமணம் விஷேசம் .போனவாரமே போக வர ரிசர்வ் பண்ணி ரயில் டிக்கெட்டைக் கூரியர்ல அனுப்பி விட்டார்கள் .ஆனால் அம்மாவுக்கு மனசுபூராவும் இங்கதான் இருக்கும் என்று தாமுவுக்குத் தெரியும் .
அம்மாவும் பாவம் என்று சில சமயம் தாமு வருத்தப்படுவான் .அவளுக்கும் ஒத்தாசைக்கு ஒருத்தி இருந்தா நல்லாத்தானே இருக்கும் .தனக்கு வேண்டும் என்றால்தானே கஷ்டம் என்று சமாதானம் சொல்லி அவனுக்குள் சிரித்துக்கொள்வான்.

5.35 கிளம்பிவிட்டான் .

கோவில் அடுத்தத் தெருதான் .
சாலயில் வாகனப் போக்குவரத்து இன்னும் பெரிதாய் தொடங்கவில்லை .
மெயின் ரோடு வந்தபோது அக்கம் பக்கம் உள்ள டீக்கடைகள் விழித்து விட்டது.
கடைகளில் காலையில் ஏதோ சினிமாபாட்டு உற்சாகமாகச் சத்தம் எழுப்பிக்கொண்டு இருந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையில தெய்வ சங்கீதம் போடாம இப்படிக் குத்துப் பாட்டுப் போடுகிறார்களே என்று நினைத்த தாமு மனதில் கூடவே, அவர்களுக்கு என்ன வந்தது தெய்வப்பாட்டுப் போடறதுக்கு ? அவர்கள் ஜாதகம் ஒருவேளை நல்லா இருக்கலாம் என்று தனக்குத்தானே தோஷம். அவர்கள் என்ன செய்வார்கள் என்று கூடவே நினைத்து நொந்து கொண்டான்.

பாவம் அவன் கவலை அவனுக்கு !

மெயின் கடந்து கோவில் வீதித் திரும்போது லேசாய் இருட்டான இடத்தில் காத்து இருந்தது போல யாரோ ஒரு தள்ளாத வயதுக்காரர் கை நீட்டி மறித்தார் .
ஆனால் தாமு அவரைத் தவிர்க்க ,ஒதுங்கிக் கடந்து வந்தான்.
லிப்ட் கேட்கிறார் போல !
நாமதான் இந்தத் தெரு தாண்டிப் போவதில்லையே என்று சமாதானம் மனம் சொல்லினாலும் வண்டியின் சைடு மிர்ரரில் அவர் பரிதாபமாக நின்று கொண்டு இருப்பதைப் பார்த்தான் .
கோவில் வந்து விட்டது .

சஷ்டி என்பதால் கோவிலில் ஜனம் நிறைந்து இருந்தது .
ஓம் என்று பெரிய கரு நீலத்தில் திரை போட்டு இருந்தது . அலங்காரத்தின் போது மறைக்கப் பயன்படுத்தும் திரை .
உள்ளே கர்பக்கிரகம் மறைத்து இன்னொரு ஒரு சின்னத் திரை இருக்கும் .
சந்தனக்காப்பு யார் சாற்றுகிறார்களோ அந்த உபயதாரர் வந்த பின்தான் அந்தத் திரையும் விலக்கி சுவாமியின் கண் வரைந்துத் திறப்புச் செய்வார்கள் .திறப்புச் செய்த சுவாமியின் கண் பார்வை படுவதால் தோசமெல்லாம் விலகிப்போவதென்பது ஐதீகம் .

நேரம் 5.40

வாசு அண்ணாவின் அசிடெண்ட் மடப்பள்ளியிலிருந்து அவர் பொங்கள் பானைத் தூக்கிக்கொண்டு வந்தவர் அடையாளம் கண்டு கொண்டு ,என்ன அண்ணா இவ்வளவு லேட் ? அண்ணா உள்ளதான் இருக்கா என்று சொல்லிக்கொண்டு திரை விலக்கி உள்ளே போனார் .
அவர் உள்ளே போகவும் உள்ளிருந்து யாருடைய செல் போனோ ஒலிக்கவும் சரியாக இருந்தது .

உள்ளிருந்து பதஷ்டமாய் வாசு அண்ணா குரல் கேட்டது .
திரை விலக்கிப் பேசிக்கொண்டே வெளியே ஏறக்குறைய ஓடிவந்த வாசு அண்ணா, கூடவே அண்ணாவின் அசிஷ்டெண்ட் வெளியே ஓடிப்போய் ஸ்கூட்டரை எடுத்துக்கொடுத்து விட்டு அங்கேயே நின்றான்.

கவனித்தவர்கள் எதுவும் புரியாமல் அண்ணாவின் அசிடெண்டை நோக்கிப் கோவிலுக்கு வெளியே தொடர்ந்து போனார்கள் .
என்னாச்சு என்று ஒருவர்கேட்ட போது ,
அண்ணாவின் தந்தை கோவிலுக்கு வரும்போது யாரோ வண்டிக்காரர் இடித்து விட்டா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராம் . பக்கத்தில் இருக்கவா போன் பண்ணியிருக்காங்க அதான் அண்ணா போகிறார் என்றான் .

மணி 5.50
நேரம் கடந்து கொண்டிருந்தது.
கோவில் வாசலில் சிலர் மட்டும் காத்து இருக்க அவர்களோடு தாமுவும் வாசுதேவன் குருக்கள் வருகைக்காகக் காத்து இருந்தான் .

உள்ளே அற்புதமாக அலங்காரத் தோரணையில், கண் திறக்கப்படாத வள்ளி முருகன் திரைகளைத் தாண்டி தன் அகக்கண்ணால் தாமோதரனைப் பார்த்து, தன் இதழோரம் மெல்லிய புன்னகைப் புரிந்துகொண்டு இருந்தார்.

T.நர்மதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிரும் இழை

காலை குளிர்
மறையும் அழகு,

கருநிற மேகங்கள்
மஞ் அரிதாரம் பூசி,

நெருப்புத் தணலை
தலையில் கொட்டிய வேளை,

கொம்பொலி நெரிசலில்லா
சாலை எனும் ஓடையில்,

துடுப்பாக பற்றிய
அலையியற்றின் வேகமானியை
அதிகரித்து காலதேவனைத் தேட,

அங்கோர் மரத்தின்
அருகே நின்று ஒருத்தி,

உதிரும் இலைகளுக்கும்
நிழல் தரும் மரமாக நின்றாள்..

M.R.R.A.George

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# DHEVI HARDWARES

## General hardware Merchants, Dealers in G. I Pipes & Fitings, Brass, Stainles Steel Fittings, Gate Valves & Ball Valves Etc.

**No. 18, Qary Road, Colobo - 12, Sri Lanka**

**Tel : 0112 435588, 0112 337758, Fax : 0112 447800**

**Mobile : 0777 674419, E-mail : keltrron@sltnet,LK**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Atc

R. Ramachandran

# ATLAS TRADE CENTRE

**Dealers in General Hardware & Electrical Goods**

**Specialist in Power Tools, Safety Equipments**

No. 15A, Abdul Hameed Street,
Colombo- 12.

Tel : 2471054
Fax :2436634
Mobile :077 3538481
E-mail :atlasent@sltnet.LK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# New Kandy Colour Centre

AUTHORIZED DEALERS OF DULUX PRODUCTS, JAT WOOD CARE PRODUCTS &DELMEGE HOT WATER PIPES

HOT WATER PIPES AND FITTINGS

No.93,D.S.Senanayake Veediya

**Tel : 0812222616**

**Mobile :0777488751/0777427947**

**Email: candycolour.93@yahoo.com**

**BRANCH:**

**No.9, Kandy Road ,Balagolla.**

**Tel: 0812420034**

Dulux

JAT
Get the right finish, first.

Dux


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ganesh Textiles
## (Private) Limited

## Wholesale & Retaid Dealers in Textiles

81 - 83,Main Street,
Colombo 11,Sri Lanka.
Tel:2325128
Tel:2343078
Tel:2458937

E-mail: ganeshtextiles81@gmail.com
Web: ganeshtextiles.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முயற்சியே வெல்லும்

பச்சைப் பசேல் என கண்ணுக்கு குளிர்ச்சியை அளிக்கும் தேயிலைத்தோட்டம். அத்தோட்டத்தில் தன் தலைவனின் வருகைக்காக் காத்துக் கொண்டிருக்கும் இளம்பச்சை நிறத் தேயிலைக் கொழுந்துகள்: அக்கொழுந்துகளின் மேல் வெண்பவளங்கள் போன்று மின்னிக்கொண்டிருக்கும் பனித்துளிகள்: இவ்வனைத்தையும் தூரத்திலிருந்து நோக்கும் போது பவளங்கள் நிறைந்த பச்சைக் கம்பளிப் போர்வையை போர்த்தியது போன்று காட்சியளித்தது கடம்ப கிராமம். சூரியன் தன் கதிர்களை மெல்ல வீசிக்கொண்டு வெளியில் எட்டிப்பார்க்க , அக்கதிரவனின் இளஞ்சூட்டில் பனித்துளிகள் மெல்ல உருகுகின்றது. வண்டுகளின் வருகைக்காக தன்னை தயார்செய்யும் பூமொட்டுக்கள் மெல்ல தன் இதழ்களை விரிக்கின்றது. இவ்வாறு நிசப்தமாக காட்சியளித்த சூழலில் சோமசுந்தரத்தின் தேய்ந்து போன சைக்கிள் குழப்பததை உண்டாக்கின்றது.

காற்றையும் முந்திக் கொண்டு சோமசுந்தரம் எங்கு போகின்றான் என்று பாதையில் சென்று கொண்டிருந்த மனிதர்களின் குரல் காற்றில் தேய்ந்து மெல்ல சோமசுந்தரத்தின் காதை வந்தடைய சட்டென சைக்கிளை நிறுத்தி " டேய் உன் மகன் போல வா என் மகன். ஆவன் நல்லா படிக்கிறான். ஆவன ஸ்கூலுக்கு போய் போடனும் என்னோட கதைக்க நேரமில்ல நா வாறன் " என்று கடுமையான குரலில் பதிலளித்த சோமசுந்தரம் மீண்டும் தன் பயணத்தை தொடர்ந்தான். இவ்வளவு கம்பீரமாகப் பேசுகிறானே இவன் பெரிய ஆளாக இருக்க வேண்டும் என எண்ணாதீர்கள். சோமசுந்தரம் ஒரு படு சோம்பேறி. வேலையின்றி வெட்டியாக ஊரை சுற்றுபவன். அவனது மனைவி சாப்பாட்டுப் பண்டங்கள் சமைத்து கடைக்கு விற்றுக் கொண்டு வரும் அச்சொற்ப பணத்திலேயே குடும்ப வாழக்கை ஓடிக் கொண்டிருந்தது எவ்வளவு பெரிய மரமாக இருந்தாலும் காற்றிற்கு சரியும் அது போல எவ்வளவு பெரிய உருவமாக இருந்தாலும் அன்பு என்ற ஆயுதத்தினால் ஆட்கொள்ளப்பட்டிருந்தான் சோமசுந்தரம். மனைவி, மகன் இவர்களே சோமசுந்தரத்திற்கு சொந்தம் என்று சொல்லிக்கொள்ள இருந்வர்கள். தன் மனைவி மகன் மீது அளவுகடந்த அன்பு வைத்திருந்தான் சோமசுந்தரம். குடும்பத் தலைவன் என்ற பெயர் மட்டும் தான் சோமசுந்தரத்திற்குரியது. ஆனால் குடும்பப் பொறுப்புக்கள் அனைத்தையும் கண்ணை இமை காப்பது போல பாரத்துப் பார்த்து செய்பவள் சோமசுந்தரத ்தின் மனைவியே.தன் முயற்சியினாலேயே சொற்பளவு பணத்தைக் கூடப் பெற்று வந்தாள். அவள் தினம் தினம் கிளிப்பிள்ளைக்கு சொல்வதைப் போன்று பற்பல அறிவுரைகளைக் கூறிக்கொண்டு வந்தாள் ஆனால் செவிடன் ஊதிய சங்கு போல ஒன்றையும் கணக்கில் எடுப்பதில்லை சோமாசுந்தரம். இவ்வாறே காலம் ஓடிக் கொண்டு இருந்தது.

பதினேழு வயது நிரம்பிய சோமசுந்தரத்தின் மகன் படிப்பில் கெட்டிக்காரனாகவும் புத்திக்கூர்மை மிக்கவனாகவும் காணப்பட்டான். தன் தந்தை வேலையில்லாமல் ஊரை சுற்றுவது அவனுக்குப் பிடிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாள் தன் தந்தையை தனியாகச் சந்தித்து "அப்பா! நா ஓங்கயோட கொஞ்சம் பேசனு" என தாழ்ந்த குரலில் கேட்க "சொல்லுப்பா! என்ன பிரச்சன ஒனக்கு" என கம்பீரமான குரலில் பதிலளித்தான் சோமசுந்தரம். தன் தந்தையிடமிருந்து பல எதிர்பார்ப்புக்களை எதிர்பார்க்கின்றான் என்று அவனது கள்ளம் கபடமற்ற விழிகளிலிருந்து சோமசுந்தரம் அறிந்து கொண்டான்.

"அப்பா! ஏம்பா இப்படி இருக்கீங்க, உங்களுக்கு அம்மா எவ்வளவு அறிவுர சொல்லுறாங்க. தினம் தினம் எங்களுக்காக கஷ்டப்படுறாங்க இதெல்லாம் ஒங்களுக்கு விளங்கலயா? எங்களோட கண்ணுல சந்தோஷத்த பார்க்கணும்னு நீங்க நெனச்சிங்கனா கொஞசம் முயற்சி செய்ங்க. நீங்க எவ்வளவு முயற்சி செய்றீங்களோ அவ்வளவு சீக்கிரமா ஒங்களுக்கு ஒரு வேலைய தேடிக்கிறலா அப்பா! உங்களோட மகனா நா இப்படியெல்லா, பேசக்கூடாது ,என்ன மன்னிச்சிருங்க அப்பா" என்று கண்களில் நீர்பொங்க கூறி தன் தந்தையைக் கட்டித் தழுவிக் கொண்டான். தன் மகன் கூறியதற்கு பதிலளிக்க முடியாமல் வாயடைத்துப் போனான் சோமசுந்தரம்.

தன் மகனின் உணர்ச்சி பொங்கிய வார்த்தைகளை சிந்தித்தவாறே கடம்ப கிராமத்தின் முச்சந்திக்கு சென்று கொண்டிருந்தான். ஆங்கு வளர்ந்திருந்த ஒரு மாமர நிழலில் இளைப்பாறிக்கொண்டிருந்தான். முதிய வேளை என்பதனால் தன்னையே அறியாமல் நித்திரைக்குச் சென்றான் சோமசுந்தரம். ஆழ்ந்த நித்திரையிவ் இருந்த சோமசுந்தரத்தின் கனவில் சோமசுந்தரமே தோன்றி தன்னை திட்டிக்கொண்டிருந்தான். "டேய்! மனுசனா நீ இத்தன வருஷமா கொஞசம் கூட முயற்சி செய்யாம ஊர சுத்திட்டு இருந்த. போ இப்போவாவது உண்ட மகன்ட சொல்லுக்காவது ஒரு வேலைய தேடிக்கோ போ!" என்ற விம்பம் கண்ணுக்குள் இருந்து மறைவதற்குள் சட்டென நித்திரையிலிருந்து விழித்தான். முதிய வேளை என்பதால் பசி அவன் வயிற்றைக் கிள்ளியது. தங்கநிறமாகப் பழுத்துத் தொங்கிய மாங்கனிகளின் பால் அவனின் கண்கள் நகர்ந்தது. மாம்பழங்களோ உயரத்தில் காணப்பட்டது . இவனால் மரம் ஏற முடியவில்லை ஆனாலும் பசிக்கொடுமையினால் முயற்சி செய்தான்.

முதற் தடவை கீழே விழுந்தான். அவன் அதோடு நின்றுவிடாமல் மீண்டும் முயற்சித்தான். இவ்வாறு நான்கு தடவைகள் கனிகளைப் பறிக்க முடியாது போனாலும் ஐந்தாவது தடவை எப்படியோ இரு மாங்கனிகளைப் பறித்துக் கொண்டான். தான் பறித்த மாங்கனிகளை ருசிபார்த்துக் கொண்டிருந்தபோது அவனுடைய கவனம் தனது சிந்தனைக்குள் சென்றது. " இவ்வளவு நாளா நா முயற்சியில்லாம இருந்து பெரிய முட்டாள் தனமான வேலய செஞ்சிட்டேன். எதுவுமே சும்மா கிடைக்காது. கஷ்டப்பட்டு பெற்றுக்கொள்ளனும்" என்ற சிந்தனைத் துளி சிந்தனையாக மட்டும் இருந்து விடாமல் உருப்பெற்றது. சட்டென எழுந்து எங்கெங்கோ அலைந்து திரிந்தான். யாரும் அவனுக்கு வேலை கொடுக்கவில்லை எனினும் அவன் சளைக்காது "வலை பின்னும் சிலந்தி எவ்வளவுதான் வலையை உடைத்தாலும் மீண்டும் மீண்டும் கட்டிக்கொள்வது போல" எவ்வளவு தடங்கல் வந்தபோதும் அதை முயற்சியால் வென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியில் அவனுக்கு ஓர் முச்சக்கர வண்டி ஓட்டுனராக வேலை கிடைத்தது. தற்போது அவன் முயற்சியைப் பற்றியும் அதன் நன்மைகள் பற்றியும் நன்கு அறிந்தவனாகத் திகழ்கின்றான். அவனது வாழ்க்கை மகிழ்வுடன் உள்ளது.

"ஒருவன் பல தடவைகளில் தோற்றுப் போகலாம் ஆனால் முயற்சி செய்ய முயற்சி செய்ய என்றோ ஒருநாள் வெற்றி கிட்டும்"

சு.ராஜ்கிவின்
தரம் 13 கலைப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றை உணர்ந்தால் நிச்சயம் முன்னேற்றம்..

1.இந்த மூன்றினையும் யாராலும் திருட முடியாது
கல்வி ,அறிவு ,ஆற்றல்

2.இந்த மூன்றினையும் திரும்பப் பெற முடியாது
வில்லிலிருந்து கிளம்பிய அம்பு
நாவிலிருந்து வெளிப்பட்ட சொல்
உடலை விட்டுப் பிரிந்த உயிர்

3.இந்த மூன்றும் மனிதனை கீழ்த்தரமாக்குகின்றது
திருட்டு ,பொய் ,புறம் பேசுதல்

4.இந்த மூன்றும் சகோதரர்களுக்கிடையே பகையை உண்டு பண்ணும்
மண் ,பெண் ,பொன்

5.இந்த மூன்று நபர்களும் எப்பொழுதும் துக்கத்திலேயே இருப்பார்கள்
பொறாமைக்காரன் ,சந்தேகப் பேர்வழி ,சோம்பேறி

6.இந்த மூன்றும் மனிதருக்கு வாழ்வில் ஒருமுறை தான கிடைக்கும்
பெற்றோர் ,அழகு ,வாலிபம்

பர்ஹான் அப்துல்லாஹ்
தரம் 5T


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DEVAGANESH,
JUDE, LIXITH
&
RYJU
BATCH OF 2007

86, Bomaluwa Road,
Watapuluwa,Kandy

0773330333
ryju@gssintl.biz

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20,000 வருடங்களுக்கு முன்னர் கடலில் மூழ்கிப் போன தமிழனின் வரலாறு..

தமிழ் மொழியை பேச மறந்துவரும் தமிழர்களே. எத்தனை பேருக்கு தமிழின் பெருமைகள் முழுமையாக தெரியும்? "கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மூத்த குடியினர்" தான் தமிழர்கள். ஆனால் இன்று தமிழில் பேச வெட்கப்படுவதும் அவன்தான். இதற்கு காரணம் எம் வரலாற்றை முழுமையாக தெரிந்து கொள்ளாததுதான். முதலில் நாம் நம் வரலாற்றை தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு உங்களை 20,000 வருடங்களுக்கு முன்னர் கடலில் மூழ்கிய ஒரு உலகிற்கு அழைத்துச் செல்லப்போகின்றேன். என்னுடன் சேர்ந்து பயணிக்க சில நி-மிடங்களை ஒதுக்குங்கள். அப்போதுதான் சில உண்மைகள் உங்களுக்கு புரியும்...

"குமரிக்கண்டம்" இங்குதான் பல வரல-ாற்று அதிசயங்கள் நிகழ்ந்துள்ள ஆம் உலகின் முதல் மனி-தன் பிறந்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இங்கு தான் நம் மூதாதையர் வாழ்ந்துள்ளனர். ஆனால் இன்று கடலுக்கடியில் அமைதியாக உறங்கிக்கொண்டிருக்கின்றது குமரிக்கண்டம். குமரிக்கண்டம் என்பது முற்காலத்தில் இருந்ததாக கோட்பாடுகளால் ஊகி-க்கப்படும் அல்லது இலக்கியங்களில் கூறப்படும் மிகப் பெரிய நிலப்பரப்பா-கும். கண்டம் போன்ற பெரும் நிலப்பகுதியானது இன்றுள்ள இந்தியாவின் எல்லையான குமரி முனைக்குத் தெற்கே முற்காலத்தில் பாண்டியர்க-ளின் ஆட்சிக்கு கீழ் அமைந்திருந்தது எனக் கருதுவதற்கு இடம் தரும் வகையில் பண்டைத் தமிழ் இலக்கிய நூல்களில் கூறப்பட்டுள்ளது.

தேவநேயப் பாவாணர் முதலானோர் இந்த குமரிக்கண்டத்தில்தான் வாழ்ந்துள்ளார். இங்கு மாந்தர்களும் தமிழர்களும் முதன்முதல் தோன்றியுள்ளதாக எழுதியுள்ளனர்.

ஆதி மனிதன் தோன்றியிருக்கக் கூடிய தென் குமரிக்கண்டம் கடல்கோளால் அழிவிற்கு உட்பட்டது என்பது ஆய்வாளர்களின் கருத்து. கடந்த1960ஆம் ஆண்டு இந்து மாகடலில் கடற்தள ஆராய்ச்சியாளர் செய்த ஆய்வில் தமிழகத்தின் கன்னியாகுமரிக்குத் தெற்கே இரண்டு கண்டங்கள் இருந்திருப்பதை கண்டுபிடித்துள்ளதாக கூறுகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960 - 1970 ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட இந்து மாகடல் கடற்தள வரைபடங்களில், குமரிக் கண்டத்தின் பூர்வீக அமைப்பு நிலை காணப்படுகிறது.அரபிக் கடலுக்கு தெற்கில், இலட்சத் தீவுகள் நீட்சியில் மாலத் தீவின் வடக்குப்பகுதியுடன் பிணைந்து, தெற்கில் சாகோஸ் ஆர்கிபிலாகோ [Chagos Archipelago] வரை சுமார் 2000 மைல் தூரம் வரைக் குமரிக் கண்டம் இருந்திருப்பதாக குறிப்பிடுகின்றது.

அகிலத்திரட்டு அம்மானை என்னும் அய்யா வழி மதத்தினரின் புத்தகத்தில் குமரி 152 மைல்கள் தெற்காக விரிந்திருந்தது என்றும் அதில் 16,008 வீதிகள் இருந்ததென்றும் கூறப்பட்டுள்ளது.

இடைச்சங்கத்தின் தலைநகரம் கபாடபுரமிருந்ததற்கான ஆதாரங்கள் ராமாயணத்தில் தென்படுகின்றன. வால்மீகி தமிழ் சங்கத்தில் உறுப்பினராக இருந்தார் எனவும், ராமாயணத்தில் சங்கத்தலைநகரம் கபாடபுரமெனவும் கூறப்படுகின்றது.

ராமாயணத்தின் காலம் கி.மு.4500-4000 என தெரிகிறது. இடைச்சங்கத்தின் காலம் கி.மு.5300-1600 என தெரிகிறது. திருவிளையாடல் புராணத்தின்படி அனந்தகுண பாண்டியன் என்ற பாண்டிய அரசனின் ஆட்சியில் ராமன், ராவணன் மீது படையெடுப்பு நடத்தினான். சின்னமனூர் செப்பேடுகளிலும் தசமுகன் சார்பாக சந்து செய்து என்று பெயர் தெரியாத பாண்டிய மன்னனை குறிப்பிட்டுள்ளனர். தற்போதுள்ள இயற்பியல் பூகோள வரைபடங்களில் கி.மு.30,000 குமரிக்கண்டமிருந்த இடத்தில் பெருமளவு கடலின் ஆழம் 200 அடி வரை இருக்கிறது. சில இடங்களில் 2000அடி வரை இருக்கிறது. இப்பகுதிகள் தற்போது குறைவான ஆழம் கொண்டுள்ளதால் இங்கு குமரிக்கண்டம் இருந்ததற்கான சாத்தியக்கூறுகள் அதிகம். மேலும் கந்தபுராணம் படி குடிலை, சிவை, உமை, தரணி, சுமனை,சிங்கை மற்றும் 'குமரி என்று ஏழு ஆறுகள் ஓடியதாகவும் கூறப்படுகின்றது.

சித்தர்கள் சில பேர் குமரியில் வாழ்ந்ததாக சைவவாதிகள் கருதும் வண்ணம் சில சான்றுகளும் உள்ளன. மூன்று சங்கம் வைத்து தமிழை வளர்த்து வந்தனர் எம் முதாதையர்கள். இந்த 3 சங்கமும் இருந்த கண்டம்தான் குமரிகண்டம். சங்க கால தமிழர்கள் வானத்தையே தன் வீட்டின் மேற் கூரையாக கொண்டவர்கள். வானத்தில் நாள்தோறும் நிகழ்கின்ற வானியல் நிகழ்வுகளையும், மாற்றங்களையும் கூர்ந்து கவனித்து வானியல் தொடர்பான சிந்தனைகளை இவ்வுலகுக்கு எடுத்தியம்பியவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் வானியல் துறையில் சிறந்து விளங்கிய பலர் வாழ்ந்தனர் என்பதை கணியன் பூங்குன்றனார் கூறியுள்ளார். இத்தகைய சிறப்பு கொண்ட கண்டம்.தமிழ் கலாச்சாரம், தமிழ் மக்களின் பண்பாடு, கலை மற்றும் இலக்கியம் போன்றன இன்றும் இந்தியா, இலங்கை, மலேஷியா, சிங்கப்பூர் மற்றும் உலகம் முழுவதும் தமிழர்கள் வாழ்க்கை வழிகளில் வேரூன்ற காரணமான கண்டமாக விளங்கியுள்ளது குமரிக்கண்டம். தமிழர்கள் வானியலை மிகத் துல்லியமாக அறிந்து வைத்திருந்தனர் என்பதற்கு இன்னும் பல ஆதாரங்கள் தமிழ் இலக்கியங்களில் கொட்டிக் கிடக்கின்றன.தமிழ் இலக்கியங்கள் மூலமாகவே ஆரிய புராணங்களும் பல அரிய செய்திகளை கடன்பெற்று கதைகளாக உலகிற்கு வழங்கின.

தொல்காப்பியம், புறநானூறு, அகநானூறு, நாலடியார், திருக்குறள் இது போன்ற அரும்பெரும் பொக்கிஷங்கள் தோற்றம் பெற்றகாலம் குமரிகண்டம் இலக்கியத்தில் மட்டும் அல்ல, சிற்பம் செதுக்கல்களுக்கும் எடுத்துக்காட்டாக இருந்தன. பார்க்கும் திசைகளில் எல்லாம் சிற்பங்கள் கட்டடங்கள் என குவிக்கப்பட்டிருந்தன. இந்த அளவு சிறப்பான நுட்பங்களை பயன்படுத்தி கட்டப்பட்டுள்ள கோவில்களை இன்று பார்த்தாலும் தொழில்நுட்பம் தோற்றுவிடும் என்பது உறுதி. அது மட்டும் அல்ல இவ்வாறான கட்டடங்களை அமைக்க 200 ஆண்டுகளுக்கு மேல் தேவைப்படும் என்பது உண்மையே... இதற்கு எடுத்துக் காட்டாக தஞ்சாவூர் பெருவுடையார் கோயிலை கூறலாம். இதனை ஒவ்வொரு தமிழனும் தெரிந்து கொள்ள வேண்டும்.

தஞ்சாவூர் பெருவுடையார் கோயிலுக்கு சிறப்பு அம்சங்கள் பல உண்டு. இரண்டு அல்லது மூன்று தளங்களை மட்டுமே கொண்டு கோயில்கள் கட்டப்பட்டு வந்த காலத்தில், கற்களே கிடைக்காத காவிரி சமவெளிப்பகுதியில், 15 தளங்கள் கொண்ட சுமார் 60 மீட்டர் உயரமான ஒரு கற்கோயிலை இராஜ இராஜன் எழுப்பியது என்பது மாபெரும் சாதனையே.

அது மட்டுமன்றி, கல்வெட்டுகள், சிற்பங்கள், ஓவியங்கள், வழிபாட்டுக்கான செப்புத் திருமேனிகள் என்று பல புதிய அம்சங்களையும் இத் திருக்கோயிலில் புகுத்தி கோயில் கட்டும் கலையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியவன் இராஜ இராஜன். எதிரியும் மயங்கும் உன்னத கலை அம்சத்தை கொண்டுள்ளது. அது மட்டும் இல்லை.

இந்த தொழில்நுட்ப உலகில் நாம் எல்லாம் உடனடி தீர்வை நாடி இரசாயண மருந்துக்களை பயன்படுத்தி பின்னர் பின் விளைவுகளையும் சந்திக்க நேரிடுகின்றது.ஆனால் அன்று தமிழன் மருத்துவங்களை பயன்படுத்திய விதம் வேறு...? எப்படி கண்டு பிடித்தான் மூலிகைகளை வைத்து தொற்றுநோய் கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நொடியில் மறைக்க செய்யும் மருந்துகளை..? இவற்றுக்கு எல்லாம் இன்று கூட விஞ்ஞானம் விடை தேடுகின்றது... எந்த ஒரு தொழில்நுட்ப உதவியும் இன்றி எப்படி அதை தமிழன் கண்டு பிடித்தான். இன்று ஒவ்வொரு தமிழனும் மார்த்தட்டி பெருமை கொள்ள வேண்டும். நாம் தமிழனாக பிறந்து விட்டோம் என்று.

பலவற்றில் புரட்சியை ஏற்படுத்தியவன்தான் தமிழன். தமிழன் தன் அதீத பகுத்தறிவின் ஊடாக தான் வாழ்ந்த நிலங்களை கூட குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ,பாலை, என ஐந்து திணைகளாகவும், தமிழ் இலக்கியங்களை அகம் , புறம் எனவும் தமிழரின் கலைகளை இயல், இசை, நாடகம் என்றும் எழுத்துக்களை கூட உயிர், மெய், உயிர் மெய் எனவும் வகுத்தான்.

மொழி அறிவியலை தமிழன் இத்தகைய அளவு கையாண்டதை போல யாரும் கையாலவில்லை என்பது மறுக்க முடியாத ஒரு உண்மை. தமிழன் எப்படி முதலில் தோன்றினானோ அது போலவே தமிழ் மொழியும்-தான் முதலில் தோன்றி இருக்க வேண்டும்.

உலகின் ஆதிமொழி தமிழ்தான் என்பது பலரின் கருத்து.இத்-தனை சிறப்புகளையும் கொண்ட "குமரிக்கண்டம்" இன்று கடலுக்கடியில் அமைதியாக உறங்கிக்கொண்டிருக்கின்றது.ஆனால் ஒவ்வொரு தமிழனும் தொடர்பு இல்லாதவன் போல சிதைந்துகிடக்கின்றான்.

ஏன் வரலாற்றை தெரிந்து கொள்ள வில்லை. இனியாவது தலை நிமிர்ந்து நில் தமிழனென்று சொல். யாருக்கும் இல்லாத தனிப் பெருமை தமிழனுக்கு உண்டு. இதை காக்க வேண்டிய கட்டாயம் தனி மனிதனுக்கு உண்டு.

அஜந்தராஜ்
தரம் - 13
விஞ்ஞானப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலய மட்ட போட்டி முடிவுகள்

| மாணவர் | நிகழ்ச்சி | பிரிவு | பெற்ற இடம் |
|---|---|---|---|
| S.சத்விந்த் | தனிஇசை | 2 | 3ம் இடம் |
| M.ஜகீர்தன் | பேச்சு | 4 | 2ம் இடம் |
| S.ஜீதுஹர்ஷன் | இலக்கணப் போட்டி | 4 | 2ம் இடம் |
| R.ராஜ்கிவின் | இலக்கிய விமர்சனம் | 5 | 2ம் இடம் |
| M.R.R.A.ஜோர்ஜ் | பேச்சு | 5 | 3ம் இடம் |
| E.இக்மான் | தமிழறிவு வினாவிடை | தி.போ | 3ம் இடம் |
| M.ராபின் | | | |
| S.சிமாஸ் | | | |
| R .ராஜ்கிவின் | | | |
| T.D.வினித் | | | |
| T.நர்மதன் | குழு இசை | தி.போ | 1ம் இடம் |
| M.மிதுலன் | | | |
| A.பிரஸ்லி | | | |
| N.B.Y.ஜெயராஜ் | | | |
| S.சிதுர்ஷன் | | | |
| R.D.அஷ்விந்த் | | | |
| R.கிருஷ்ணராஜா | | | |
| R.ஹரீஸ் | | | |
| S.கிஷோவர்மா | | | |
| P.சதுர்ஷன் | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மட்ட தமிழ் தினப் போட்டிகள்

| போட்டி | தரம் | இடம் | மாணவர் பெயர் |
|---|---|---|---|
| கட்டுரை | 6 | 1 | M.டில்ஷான் |
| | | 2 | M.M.M.ரைஹான் |
| | | 3 | D.குபரேஷ் |
| | 7 | 1 | M.R.R.அஹமட் |
| | | 2 | V.நவிஷான் |
| | | 3 | S.கிரிகன் |
| | 8 | 1 | T.ராகேஷாபிள்ளை |
| | | 2 | S.கிஷாரதன் |
| | | 3 | F.ஆ.பராஸ் |
| | 9 | 1 | R.அகிலாஷ் |
| | | 2 | B.ரிஷிவர்தன் |
| | | 3 | W.N.ஆர்ஷிக் |
| | | 3 | மொஹமட் நபீஸ் |
| | 10 | 1 | K.ராஜ்கிரண் |
| | | 2 | V.டிரோன் |
| | | 3 | M.R.யு.ஹகம் |
| | 11 | 1 | M.பவன் ஷாஹர் |
| | | 2 | M.I.I.அஹமட் |
| | | 3 | H.அம்ஹர் |
| பேச்சு | 6 | 1 | M.M,ரைஹான் |
| | | 2 | N.ஆதில் |
| | | 3 | D.குபரேஷ் |
| | 7 | 1 | A.ஆஜன் |
| | | 2 | S.கிரிகன் |
| | | 3 | N.கோபிநாத் |
| | 8 | 1 | S.கிரிஷாதரன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2K19 O/L

# BATCH

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Knowledge is World

Navodhayam Institute of Education

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கட்டுரை | 12 | 1 | T.D.வினித் |
| | 13 | 2 | A.A.A.ரஹ்மான் |
| | 12 | 3 | K.ராஜ்கிவின் |
| பேச்சு | 10 | 1 | R.M.ராஹிம் |
| | | 2 | M.I.M,ஹம்தி |
| | | 3 | R.லினோஷன் |
| | 11 | 1 | S.சிமாஸ் |
| | | 2 | M.ஜகீர்தன் |
| | | 3 | M.டிலான் |
| | 12 | 1 | M.R.மெரிஷன் |
| | | 2 | P.மதூஷன் |
| கவிதை | 10 | 1 | P.சதுர்ஷன் |
| | | 2 | V.வில்பிரட் |
| | | 3 | M.I.M.ஹம்தி |
| | | 3 | S.லுஷாந்தன் |
| | | 1 | M.Z.M,சாஜித் |
| | | 2 | M.J.M.ஹசன் |
| | | 3 | K.மார்க் |
| | | 3 | R.விகாஷ் |
| சிறுகதை | 10 | 1 | S.பிரமுத்ராஜ் |
| | | 2 | K.ராஜ்கிரன் |
| | | 2 | P.சதுர்ஷன் |
| | 12 | 1 | K.ராஜ்கிவின் |
| | 13 | 2 | A.A.A.ரஹ்மான் |
| | 12 | 3 | R.R.நிஷாந்தன் |
| பாவோதல் | 7 | 1 | S.டிஹான் |
| | | 2 | A.ஆஜன் |
| | | 3 | V.நவிஷான் |
| | | 3 | N.கோபிநாத் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| உறுப்பெழுத்து | 7 | 1 | W.A.G.N.V.B.அமுனுகம |
| | | 2 | M.ஆதில் |
| | | 3 | E.G.ரத்னாயக |
| வாசிப்பு | 7 | 1 | E.M.C.T.ஏகநாயக்க |
| | | 2 | S.M.சல்ஹான் |
| | | 3 | M.F.ஹுசையா |

| பிரிவு | போட்டி | இடம் | மாணவர் பெயர் | பாடசாலை |
|---|---|---|---|---|
| 1 | கட்டுரை | 1 | T.சதுர்ஷிகா | விவேகானந்தா த.வி |
| | | 2 | T.A.F.ஹாதியா | ஆமினா பெண்கள் கல்லூரி |
| | | 3 | K.பிரவீன்குமார் | ஸ்ரீவாணி த.வி |
| 2 | கட்டுரை | 1 | F.மிஸ்னா | ஆமினா பெண்கள் கல்லூரி |
| | | 2 | N.நதீஷா | ஸ்ரீவாணி த.வி |
| | | 3 | M.மித்யாஷினி | விவேகானந்தா த.வி |
| 3 | கட்டுரை | 1 | சாயன்யா | புனித. அந்தோனியார் மகளிர் கல்லூரி |
| | | 2 | S.லோஷினி | புனித.தோமையார் மகளிர் கல்லூரி |
| | | 3 | R.மெலீஹா | ஆமினா பெண்கள் கல்லூரி |
| 4 | கட்டுரை | 1 | S.பிரதீப் குமார் | புனித.சில்வெஸ்டர் கல்லூரி |
| | | 2 | F.F.F.ஷரீன் | பதியுதீன் பெண்கள் கல்லூரி |
| | | 3 | F.T.R.ஸய்னப் | ஆமினா பெண்கள் கல்லூரி |
| 1 | பேச்சு | 1 | S.அக்ஷதுவாரகா | புனித.தோமையார் மகளிர் கல்லூரி |
| | | 2 | M.I.ஸபா | ஆமினா பெண்கள் கல்லூரி |
| | | 3 | M.R.F.ஆஷிபா | பதியுதீன் பெண்கள் கல்லூரி |
| 2 | பேச்சு | 1 | M.A.F.ஆனிஷா | ஆமினா பெண்கள் கல்லூரி |
| | | 2 | M.F.இன்ஷிரா | பதியுதீன் பெண்கள் கல்லூரி |
| | | 3 | S.தக்ஷிகா | புனித.தோமையார் மகளிர் கல்லூரி |
| 3 | பேச்சு | 1 | R.சுலைகா | புனித.தோமையார் மகளிர் கல்லூரி |
| | | 2 | M.F.ஷாதியா | பதியுதீன் பெண்கள் கல்லூரி |
| | | 3 | M.K.ஸய்னப் | ஆமினா பெண்கள் கல்லூரி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | பேச்சு | 1 | M.தனூஷா | புனித.அந்தோனியார் மகளிர் கல்லூரி |
| | | 2 | L.செட்ரிச் லிட்வினா | புனித.தோமையார் மகளிர் கல்லூரி |
| | | 3 | M.A.S.பாதிமா அக்ஷா | ஆமினா பெண்கள் கல்லூரி |
| 1 | சிறுகதை | 1 | M.I.ஷாமா | ஆமினா பெண்கள் கல்லூரி |
| | | 2 | M.B.F.அஷ்பா | புனித.அந்தோனியார் மகளிர் கல்லூரி |
| | | 3 | B.M.அப்துல்லா | புனித.சில்வெஸ்டர் கல்லூரி |
| 2 | சிறுகதை | 1 | M.S.M.ரிம்ஸான் | புனித.சில்வெஸ்டர் கல்லூரி |
| | | 2 | M.A.F.அப்ஷா | ஆமினா பெண்கள் கல்லூரி |
| | | 3 | M.L.பாதிமா சீமா | பதியுதீன் பெண்கள் கல்லூரி |
| 3 | சிறுகதை | 1 | M.A.F,அப்ஷா | ஆமினா பெண்கள் கல்லூரி |
| | | 2 | S.கிரிஷ்வினி | புனித.அந்தோனியார் மகளிர் கல்லூரி |
| | | 3 | I.ஹிஷ்மா | புனித.தோமையார் மகளிர் கல்லூரி |
| 4 | சிறுகதை | 1 | M.டு.நஸ்ஹத் | ஆமினா பெண்கள் கல்லூரி |
| | | 2 | J.தினுஷ்கா | புனித.தோமையார் மகளிர் கல்லூரி |
| | | 3 | J.I.F.ஹஸ்னா | புனித.அந்தோனியார் மகளிர் கல்லூரி |
| 3 | கவிதை | 1 | M.I.M இமாஸ் | ரணபிம ரோயல் கல்லூரி |
| | | 2 | V.டிலுக்ஷன் | புனித.சில்வெஸ்டர் கல்லூரி |
| | | 3 | M.S.ஹப்ஷா பானு | பதியுதீன் பெண்கள் கல்லூரி |
| 4 | கவிதை | 1 | M.F.ஆஹிஷா | ஆமினா பெண்கள் கல்லூரி |
| | | 2 | T.அபிஷேக் | புனித.சில்வெஸ்டர் கல்லூரி |
| | | 3 | M.வினிதா தர்ஷினி | புனித.அந்தோனியார் மகளிர் கல்லூரி |
| 4 | விவாதம் | 1 | புனித.சில்வெஸ்டர் கல்லூரி | |
| | | 2 | விவேகானந்தா த.வி | |
| | | 3 | ரணபிம ரோயல் கல்லூரி | |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

| பிரிவு | போட்டி | இடம் | மாணவர் பெயர் | பாடசாலை |
|---|---|---|---|---|
| 1 | தனி இசை | 1 | R.தனேஷ் | ரணபிம ரோயல் கல்லூரி |
| | | 2 | U.சோபியா | ஸ்ரீவாணி த.வி |
| | | 3 | G.நிதர்ஷனா | புனித.அந்தோனியார் மகளிர் கல்லூரி |
| 2 | தனி இசை | 1 | E.ஷினேகா | புனித.தோமையார் மகளிர் கல்லூரி |
| | | 2 | R.யதுர்ஷன் | ரணபிம ரோயல் கல்லூரி |
| | | 3 | S.கவீஷா | புனித.அந்தோனியார் மகளிர் கல்லூரி |
| 3 | தனி இசை | 1 | S.ஷக்திகா | புனித.தோமையார் மகளிர் கல்லூரி |
| | | 2 | G.கோகுலநாதன் | ரணபிம ரோயல் கல்லூரி |
| 6-9 | குழு இசை | 1 | இந்து சிரேஷ்ட பாடசாலை | |
| | | 2 | ஸ்ரீவாணி த.வி | |
| | | 3 | ரணபிம ரோயல் கல்லூரி | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலல்

தமிழ் மண்ணில் பிறந்து தமிழர்களாக தமிழை நெஞ்சில் தவழ வைக்கும் தருணத்தில் இவ்விழாவை சிறப்பாக நடத்த வாய்ப்பளித்த எமது கல்லூரி அதிபர் அவர்களுக்கும், தம் பொன்னான நேரத்தை நமக்குப் பெருந்தன்மையோடு அர்ப்பணித்துக் கொண்டிருக்கின்ற பிரதம அதிதியாக வருகை தந்து சிறப்பித்த திரு.சண்முகம் சிவபாஸ்கரன் அவர்களுக்கும் நிகழ்ச்சியை கௌரவிக்கும் முகமாக வருகை தந்துள்ள சிறப்பு அதிதி மொஹமட் ரிஸ்வான் அவர்களுக்கும்

உரிய நேரத்தில் எமது பாடசாலைக்கு பக்கபலமாக நின்று கல்லூரியின் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் சிறப்பாக செல்வத்தாலும் , உடல் உழைப்பாலும் உதவிகளை வழங்கும் பழைய மாணவர்களே ! மாணவ மணிகளின் அஞ்சாமை இருளகற்றி அறிவொளியைப் பரவச் செய்த ஆசிரியப் பெருந்தகைகளே சேமம் பெற வேண்டுமென்று இம்மண்டபத்திலே தமிழ் முழக்கம் முழங்க நிதியுதவி செய்த பெற்றோரே, நலன் விரும்பிகளே நிகழ்ச்சிகளை மெருகூட்ட பின்னணி இசை வழங்கிய வாத்தியக் குழுவினரே சான்றிதழ்களை அச்சிட உதவியவர்களே

மேடையலங்கார ஆலோசனைகளை வழங்கிய அனைவருக்கும், காலத்தால் அழியாத கலைமதியாம் இம்மதியை அச்சிட்ட அச்சகத்தாரே தமிழன்னையின் மைந்தர்களின் திறமைக்கான தமிழின் பெருமைக்கான வருகை தந்துள்ள பெற்றோர்களே மேலும் நன்றி நவிலலில் பெயர் குறிப்பிட முடியாமல் போன இவ்விழாவின் இனிமையில் அங்கம் வகிக்கும் அன்பர்களே உங்கள அனைவருக்கும் எமது ஆயிரம் கோடி நன்றிகள் உரித்தாகட்டும்.

'காலத்தால் செய்த உதவி சிறிதெனினும்
ஞாலத்தின் மானப் பெரிது'

தமிழ்க் கலாமன்றம் - 2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# CITY PICTURE PALACE

Dealers in Hardware Items,Hardboard,Plywood,
Formica,M.D.F.Boards,Glass,Mirrors,Furniture Fittings,
Pantry Cupboard Fittings,Alumex Aluminium Extrusions,Acrylic
Sheets,Imported Ceiling Sheets,Ceiling Bars,PVC Doors
Cladding,Stainless Steel&House Hold Items.

**#122, MAIN STREET,
KURUNEGALA,
SRI LANKA.**


TEL :0372224367
FAX:0372226490
Email:citypp2@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2010 A/L BATCH

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Best Wishes From*



Follow us

**SACKOBA - QATAR**
P O Box 23188,Doha, State of Qatar
Tel:+974 66730575 / 66945502
Email: info@sackobaqatar.org
web: www.sackobaqatar.org

Affiliated with
Embassy of the Democratic Socialist Republic of Sri Lanka & OBA Parent Body in Sri Lanka

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliment From

# LUCKYLAND BISCUIT MANUFACTURERS

Nattaranpotha,Kundasale,Sri Lanka.
Tel: 081 242 0574, 242 0217
Fax: 081242 0740
E-mail: luckyland@sitnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org